விலை சதம் 50 ★ ★ பக்கங்கள்—10

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ், றிக்கோ பிடா வகைகளுக்கும்

றிக்கோ ஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR

மில்க்வைற் செய்தி
வெளியீடு - 16

15 மில்க்வைற் நீல சோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மெடிக்கேட்டற் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

விநியோகப்பகுதி,
மில்க்வைற்
சவர்க்கார்த் தொழிலகம்
த. பெ. எண்-77
யாழ்ப்பாணம்.

மலர் 19 | பங்குனி 21 | ஈழஆகி: 13 | ஞாயிற்றுக்கிழமை | [3—4—77] | இதழ் 52

### வவுனியாவில் சம்பவம்

# கடைகள் மீது தாக்குதல்; பல இளைஞர்களும் கைது!

## பொலிஸ் நடவடிக்கையை எதிர்த்து ஒருநாள் ஹர்த்தால்

வவுனியா, சனி

வவுனியாவில், பொது மக்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதாகவும் 14 தமிழ் முஸ்லிம் இளைஞர்களை கைதுசெய்ததாகவும் கூறப்படும் சம்பவத்தை ஆட்சேபித்து, நேற்று வவுனியாவில், பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு இரு கோஷ்டியினருக்கிடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து, அமைதியை நிலைநாட்ட வந்த பொலிஸார் தமிழ் கடைகளை தாக்கியதாகவும், தமிழ்-முஸ்லிம் இளைஞர்களை கைதுசெய்ததாகவும், இச்சம்பவம்பற்றிக்கூறப்படுகிறது.

வவுனியா தமிழ்ப் பகுதி ப.நோ.கூட்டுறவு சங்க காவலாளியான கந்தசாமியும், இச்சம்பவத்தின் போது காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தமிழ் தொழிற்சங்க கூட்டணி உறுப்பினர்சிலரும் இச்சம்பவத்தின் போது பலமாக தாக்கப்பட்டுள்ளனராம்.

வவுனியா எம்.பி. திரு. எக்ஸ்.எம்.செல்லத்தம்பு, இச்சம்பவம்பற்றி, பொலிஸ்மா அதிபருக்கு நேரில் புகார் செய்ய கொழும்பு சென்றுள்ளார்.

தமிழ் தொழிற்சங்க கூட்டணியைச் சேர்ந்த திரு. சம்பந்தன், இச் சம்பவம் பற்றி உடனடியான விசாரணை நடத்துமாறு பிரதமருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் தந்தி அனுப்பியுள்ளார். அரசாங்க அதிபர், பொலிஸ் அதிபர் ஆகியோரையும், தமிழ் தொழிற்சங்க கூட்டணி பிரதிநிதிகள் சந்தித்தனர்.

நேற்று வவுனியாவில் கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களும் பூட்டப்பட்டிருந்தன. மாணவர்கள் பாடசாலை பகிஷ்கரிப்பு செய்தனர்.

கூட்டுறவுசங்க காவலாளி தாக்கப்பட்டதை ஆட்சேபித்து, வடபிராந்திய ப.நோ. கூட்டுறவு சங்க ஊழியர் வேலைநிறுத்தம் செய்வது பற்றி ஆலோசித்து வருகின்றனர்.

கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் சிலர் இன்று யாழ்ப்பாணம் சென்றுள்ளனர்.

## மூதறிஞர் செல்வாவுக்கு வெளிநாட்டிலிருந்து மருந்து தருவிக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

மூதறிஞர் செல்வாவிற்கு இரத்தம் ஏற்றப்பட்டபின்னர் அவரது உடலில் அபிவிருத்தி காணப்பட்டுள்ளதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

மூதறிஞர் செல்வாவிற்கு அவசியம் கொடுக்கவேண்டிய மருந்தொன்று இலங்கையில் இல்லாததினால் அம்மருந்தை வெளிநாட்டில் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. மற்றும் சில மருந்துகள் கொழும்பிலிருந்து பெறப்பட்டுள்ளன.

குழாய்மூலம் தொடர்ந்து கோப்பி மற்றும் நீர்ப்பதார்த்தங்கள் கொடுக்கப்பட்டுவருகிறது. கடந்த 11 தினங்களாக தொடர்ந்து மயக்கத்திலிருந்து வருகிறார். மயக்கம் தெளிவதற்கான சில அறிகுறிகள் காணப்பட்டபோதிலும் இன்னும் மயக்கம் தெளியவில்லை. அடிக்கடி கை, கால்களை அசைக்க முயற்சிப்பதோடு கண் இமைகளையும் திறக்க முயற்சித்து வருகிறாராம்.

ஐக்கியதேசியக் கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மூதறிஞர் செல்வாவை நேரில் பார்ப்பதற்கு இம்மாதம் 6-ம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

கோவில்களில் தொடர்ந்து வழிபாடுகளும் பிரார்த்தனைகளும் நடைபெற்றுவருகின்றன. (க)

## சத்தியாக்கிரகத்தை கைவிட்டு கல்வி அமைச்சுக்கு விண்ணப்பியுங்கள்

### ஆயுள்வேத மாணவர்களுக்கு அரசாங்க அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'கைதடி ஆயுர்வேதக் கல்லூரியை கல்வி அமைச்சு பொறுப்பேற்றுள்ளது. ஆதலால் இனிமேல் யாழ்ப்பாண வளாகத்தின் ஒரு பிரிவாகவே இது இயங்கும். மாணவர்கள் சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டு தாமதியாமல் கல்வி இலாகாவிற்கு தங்கள் கோரிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும்.

யாழ். அரசாங்க செயலகத்தில் நேற்று மாலை நடந்த மாநாட்டில் அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ. எல். விஜயபாலா மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

இம்மாநாட்டில் யாழ். லங்கா ஆயுர்வேதக்கல்லூரி நிர்வாக அதிகாரி டாக்டர் ஏ. கங்காதரம், விரிவுரையாளர் டாக்டர் பாக்கியசோதி ஆகியோர் சத்தியாக்கிரகிகள் சார்பில் கலந்து கொண்டனர்.

தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் மாணவர் சங்க முன்னாள் தலைவர் திரு. எஸ். பொன்னையா, செயலாளர் திரு. க. கனகராசா, திரு. ரி. சிவநாதன், திரு. எஸ். சுந்தரமூர்த்தி, திரு. எஸ். குகநேசன், திரு. ஜெயராசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை நிர்வாக அதிகாரி டாக்டர் கங்காதரன் அரசாங்க அதிபரைச் சந்தித்து மாலை 5 மணிக்கு சத்தியாக்கிரகம் செய்யும் சகல மாணவர்களையும் கூட்டி வருவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் சத்தியாக்கிரகம் செய்யும் மாணவர் எவரும் மாலை நடந்த மகாநாட்டிற்கு வரவில்லை. சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்ளாத- நிர்வாகத்தினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் மட்டும் வந்திருந்தனர். முன்னாள் செயலாளர் திரு. க. கனகராஜா கல்லூரி நிர்வாகம் பற்றியும், தாங்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டது பற்றியும் அரசாங்க அதிபருக்கு எடுத்துக் கூறினர்.

கைதடி ஆயுர்வேதக்கல்லூரி பொறுப்பேற்கப்பட வேண்டும் என்று தாங்கள் வற்புறுத்தி

(10-ம்பக்கம்பார்க்க)

அல்போன்சஸ் அத்தனசியார்
சர்வரோக சிகிச்சை நிலையம்
மாதகல் வீதி — பண்டத்தரிப்பு

எமது சிகிச்சை நிலையத்துக்கருகாமையில் நாம் புதிதாக அமைத்துள்ள வியாதிஸ்தர் விடுதியுடன் கூடிய மருத்துவ நிலையத் திறப்பு விழாவின் போது அதை ஆசிர்வதித்துத்தந்த யாழ். ஆயர் பேரருள் திரு. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கட்கும், பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய அரசப் பேரவை உறுப்பினர் உயர் திரு. ஆ. தியாகராசா தம்பதிகட்கும் திறப்பு விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்கள், குருமார், கன்னியர், உறவினர், அன்பர்கள், அபிமானிகட்கும், இன்னிசை விருந்தளித்த நாதஸ்வரக் குழுவினர், இசைக் கலைஞர்கட்கும் எமது உளங்கனிந்த நன்றியைக் கூறி நிற்கின்றோம்.

மாதகல் வீதியில் அமைந்திருக்கும் இப்புதிய சிகிச்சை நிலையத்தில் இரவு பகல் வைத்திய சிகிச்சை அளிக்கப்படுகிறதென்பதையும், வெளியிடங்களிலிருந்து வரும் நோயாளர் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் அனைத்தும் அமைக்கப்பட்டிருக்கின்றதென்பதையும் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம.

வைத்திய கலாநிதி
J அல்போன்சஸ் அத்தனசியாரும் பாரியாரும்
5844

## அமிர்-வாசுதேவ சந்திப்பு திடீர் ரத்து

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கும் சமசமாஜக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட கிரியல்ல எம். பி. திரு. வாசுதேவாவுக்குமிடையே நேற்றிரவு நடைபெறவிருந்த சந்திப்பு திடீரென ரத்துச் செய்யப்பட்டது.

நேற்றிரவு 9 மணிக்கு கொழும்பு கிறின்லண்ட் ஹோட்டலில் சந்திப்பு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் இரவு திரு. வாசுதேவா திரு. அமிர்தலிங்கத்துடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு தவிர்க்க முடியாத காரணத்

(10-ப்பக்கப்பார்க்க)

# "கடமைகளை செய்தபின்பே உரிமைக்கு பாடுபடவேண்டும்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

தொழிலாளி இன்று ஓர் தேசிய வளம் என்ற முறையில் நாட்டின் அபிவிருத்தியில் பெரும் பங்கு பூண்டுள்ளான் ஆக்கபூர்வமான அறிவுபடைத்த பொறுப்பு வாய்ந்த தொழிலாளர் சக்தி தொழிற் சங்கங்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் முழுநாட்டுக்குமே பேருதவியாகும்.

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் நடந்த கல்வி பற்றிய கருத்தரங்கில், யாழ். தொழிலதிகாரி திரு. வி. விமலராஜா பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர். திரு. விமலராஜா மேலும் கூறியதாவது:

நல்லதொரு தொழிலாளியை உருவாக்கும் திறன் தொழிற்சங்கத்தின் முக்கிய பொறுப்பாகும். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முடிவுகளை தொழிலாளியை ஏற்குமாறு தூண்டுவது தொழிற்சங்கங்களின் நோக்கமாக ஒருபோதும் இருக்கக்கூடாது.

எந்தக் கருத்தையும் அவர்களுடன் மதிநுட்பத்துடன் கலந்து அவர்களின் கருத்தை அறிந்து தெளிவான திர்மானம் எடுத்தலே மிக அவசியம். தொழிற்சங்கங்களின் உரிமைகளுக்குப் போராடுவதற்காக மட்டும் அமைக்கப்படவில்லை. கடமைகளையும் தவருது செய்தபின்பே உரிமைகளுக்காகப் பாடுபடவேண்டும்.

இக்கருத்தரங்கில் அஞ்சல் அலுவலக அதிபர்களும், கிராம சேவையாளர்களும், அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதிகளும், பொது லிகிதர் சேவைச் சங்கப் பிரதிநிதிகளுப், கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களும் மற்றும் பல தனியார் துறை நிறுவனத்திலுள்ள தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்,

தொழில் ஆணையாளர் திரு ஜி. ஏ. ஞானப்பிரகாசம் தலைமையுரையில் கூறியதாவது: தொழிற்திணைக்களம் தொழிலாளருக்காக அவர்ளுக்குகந்த கருத்தரங்குகளைப் பரவலாக நடாத்தி தொழிலாளியின் திறனையும தரத்தையும் உயர்த்த முனைந்துள்ள நல்வேளையில் தொழிற்சங்கங்கள் விழிப்புடனிருந்து பயன்களைப் பெறவேண்டும்.

தொழில் அதிபர் திரு. எஸ், சிவசுப்பிரமணியம் பேசுகையில், "1963-ம் ஆண்டு தொடக்கம் தொழில்திணைக்களம் தொழிலாளர் கல்வியில் கவனம் செலுத்திவந்துள்ளபோதிலும் தற்போது உள்ள ஆணையாளரின் விடாமுயற்சியாலும் ஊக்கத்தாலுமே இந்தக் கல்வி விருத்தியடைந்துள்ளது என்றும் மக்கள் தொகை அதிகரிப்பால் ஏற்படும் தாக்கத்தையும், பாதிப்பையும் தொழிலாளர் உணர்ந்து அளவான குடும்பங்களை அமைத்தாலன்றி வாழ்வில் விமோசனமடைய முடியாது என்றும் கூறினுர்.

வைத்திய கலாநிதி ஏ. மகோர் கடனும், மாவட்ட பொறியியல் பரிசோதகர் திரு. எஸ். சிவபாஸ்கரனும், தொழில் அதிகாரிகள் திருவாளர்கள் என். சி. இராசநாயகம். வி. சுவாமிநாதனும் கருத்துரைகள் நிகழ்த்தினர்.

(க)

## தமிழ் பேணும் திருநாள்

தெல்லிப்பழை, சனி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரித் தமிழ் மன்றம் எடுக்கும் வித்துவ சிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையரின் தமிழ் பேணும் திருநாள் விழா இம்மாதம் 4 ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறும் இத்திருநாள் கூட்டத்தில் கல்வி அமைச்சின் தமிழ்ப்பிரிவுக் கல்விப் பணிப்பாளா திரு. கி. லக்ஷ்மணஐயர் கலந்து கொண்டு, உருவப்படத்தைத் திறந்துவைப்பார். பண்டிதர் திரு. இ. நமசிவாயம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். மன்றக் காப்பாளர் திரு. பொ. கனகசபாபதி நூலை வெளியிட்டுவைப்பார்.

(அ)

## தவநெறி மன்றம் அமைப்பர்

சுழிபுரம், சனி

நாடெங்கும் உள்ள கூட்டுப் பிரார்த்தனைச் சபைகள், சங்கங்கள் ஆகியனவற்றை ஒன்றிணைத்துச் சமயப் பணியாற்றும் பொருட்டு இலங்கை திருவருள் தவநெறி மன்றம் விரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் ஆதரவில் இம் மன்றத்தை இயக்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


மலேஷியன் கை மார்க்

சாம்பிராணி

கிடைக்குமிடம்:

சென்ற் அந்தனிஸ்

ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

லிமிட்டெட்,

கொழும்பு-10

போன்: 24261—5.



Raja Vajeekarana (Rasayana) Legium

ராஜ வஜீகரண (ரசாயண) லேகியம்

(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)

சாலாமிசிரி, பாதாம்பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது.

உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது.

இது ஓர்

முருகானந்தா வைத்தியசாலையின்

விசேஷ தயாரிப்பு

இதன் முக்கியமான குணங்களாவன:

ஸ்திரீ புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி சுறுசுறுப்பையும், தேக காந்தியையும் உண்டாக்கவல்லது.

உடல் பூரிக்கும், எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்கவகையில் புஷ்டியாக்கும், கணைச்சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு இடுப்புவலி, கால் கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களும், நீரிழிவு பிளட்பிரசர் உள்ளவர்களுக்கும், சிறுவர், சிறுமியர்களுக்கும் சிறந்தது.

ரசாயனங்களின் அரசன் இதுவே

ராஜ வஜீகரண (ரசாயண) லேகியம்

எல்லா வயதினருக்கும் ஏற்ற இணையற்ற நண்பன். பத்தியமில்லை.

1 ருத்தல் ரூ.75-00 1/2 ருத்தல் ரூ.40-00

வி. பி. பி. ஆடர் கவனிக்கப்படும்.

1/4 ருத்தல் ஆடர் கவனிக்கப்படமாட்டாது.

முருகானந்தா வைத்தியசாலை

104, செட்டியார் தெரு — கொழும்பு 11




## தவக்கால நற் சிந்தனை

"குழந்தை பொம்மைகளை வைத்து விளையாடிக்கொண்டிருக்கும் வரையில்தான் சமயலறையில் வேலைசெய்துகொண்டிருப்பார் தாய் விளையாட்டு போதுமாகப் போய்ப் பொம்மைகளை எறிந்துவிட்டுக் குழந்தை கத்தி அழுகிறது. உடனே தாயார் தன் வேலையை விட்டுக்குழந்தையண்டை ஓடுகிருள். ஓடும் அவசரத்தில் சமயலறைச் சாமான்கள் உருண்டும் சிதறியும் போகும். அந்தமாதிரியே உள்ளம் உருகி அழும் பக்தனிடம் பகவதி ஓடிவருவாள்.

(இராமகிருஷ்ண உபநிஷதம்)

இப்படியெல்லாம் அழுதால் ஆண்டவன் நம்மிடம் வருவாரா நமது கண்ணீரைத் துடைப்பாரா! நம் கலக்கத்தை விலக்குவாரா! சந்தேகமென்ன கட்டாயம் நமது கண்ணீரைத் துடைப்போர் கவலைகளைப் போக்குவார்.

'மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை என்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. அவர் மரித்தது பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது தேவனுக்கென்று பிழைத்திருக்கிருர்.'

(ரோமர், 6:9-10)

சிந்தித்துப் பாருங்கள். தேவனுக்கென்று பிழைத்திருக்கிற இயேசுபிரான் நமது பிழைகளையும் மன்னிக்க வருவார் என்பதில் சந்தேகமென்ன!

'கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனே அவன் பாக்கியவான்' என்பதை எண்ணி நாம் எமது வாழ்நாளில் நடந்தாகவேண்டும்.

ஞான ஒளி

# சிறுவிளம்பரம்


**FOR SALE**

OLYMPIA DELUXE Portable Typewiter Almost new. Contact: The Tora Limited. 32, Kasturiar Road, Jaffna. Teleph: 7651.

(5848)

## விற்பனைக்கு

பாவனையிலுள்ள 2 சில்லு உபோட்டா ராக்ரர் (76 ஸ்ரீ 196) கலப்பை, பெட்டி, நீர் இறைக்கும் பம் ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 10,000/- பண்டமாற்றுக பாவிக்கும் நீர் இறைக்கும் இயந்திரம், மருந்து தெளி யந்திரம், ஆகியனவும் மாற்றலாம். விபரங்களுக்கு; சுவேந்திரன் சலூன், பஸ்நிலையம், அச்சுவேலி.

5834

நல்ல நிலைமையிலுள்ள 'ஹொண்டா' (HONDA) 125 C C மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரார் ரேணிங்வேக்ஸ், 233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5830

மூன்று சில்லு துவிசக்கரம் இரு கைகளினுல் இயங்குவது நல்ல நிலையில் உள்ளது. விபரம் கோருவோர் கீழ்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம். வேலுப்பிள்ளை, விஜயகுமுதலியார் ரோட், பருத்தித்துறை.

5853

## தேவை

ஒழுக்கமும் பண்பும் உள்ளவரும் 40 வயதுக்கு மேற்பட்டவரும் வீட்டிலேயே தங்கி வீட்டுவேலைகளிலும் உதவி செய்யக்கூடியவருமான கார் சாரதி உடனே தேவை. மெக்கானிக் அனுபவம் உள்ளவராக இருந்தால் விரும்பத்தக்கது. நற்சான்றிதழ்களுடன் எதிர்பார்க்கும் சம்பளத்தைக் குறித்து விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 5824

பாம்கோட் ஹோட்டலுக்கு உதவி மனேச்சர்/பண்டகசாலை பொறுப்பாளர் தேவை. வயது ஏறக்குறைய45. பிணைப்பணம் ரூபா 2500/-. ஹோட்டல் அல்லது உணவு பரிமாறலில் முன் அனுபவமுள்ளவர்கள் சொந்த கையெழுத்தில், ஆங்கிலத்தில் எழுதி விண்ணப்பிக்கவும். ஒட்டோஸ் லிமிட்டெட், 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5817

நெசவு வேலையில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. தங்குமிட வசதியுண்டு. பிள்ளைகளுடைய நெசவு ஆசிரியர் விரும்பத்தக்கது. நேரில் வரவும். ராஜன் ரெடிமேட் காமன்ஸ், ஆடியபாதம்ரோட், கல்வியங்காடுசந்தி, யாழ்ப்பாணம். 5840

யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயக்காணி ஒன்றை பொறுப்பேற்று நடத்த அனுபவமுடைய இளைஞர் தேவை. நல்ல எதிர்காலமுண்டு. விபரங்களுடன் மனுச்செய்க 54, ஹேய்க் ரோட், கொழும்பு- 4.

5842

பப்படம் தயாரிப்பதில் 4 வருஷம் அனுபவம் உள்ளவர். விபரங்கள் குறிப்பிட்டு கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5832, C/o. ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.

5832

## தேவை

வர்த்தக- எண்கணிதம், பொருளியல், சரித்திரம், குடியியல், புவியியல் இவ்வைந்து பாடங்களையும் க.பொ.த. சாதாரண வகுப்புக்களுக்கு படிப்பிப்பதற்கு திறமை வாய்ந்த தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கவும். அத்துடன் க. பொ. த. சாதாரண வகுப்புக்கும் அரசாங்க பரீட்சைகளுக்கும் சிங்களம் போதிக்க தமிழ்தெரிந்ததகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அதிபர், கலைவாணி கல்வி நிலையம், கண்டி வீதி, கிளிநொச்சி.

5854

## வைத்தியம்

சிறு நீர் மஞ்சளாகவோ சிவந்தோ நிறம்மாறிப்போனுல் செங்கமாரி. கல்லீரலைப்பாதிக்கும் இந்நோய் முறிவுற்று முதிர்ந்தால் ஆபத்தானது. எந்நிலையிலும் இதனைக் குணப்படுத்திக் கைதேர்ந்தவர். சிறுபிள்ளைகள் வலி திரும்பிவராமற் குணப்படுத்துவார். காலவியல், தலையியல், கபாலஇடி, சிரங்கு, குட்டம், தொய்வு, குன்மம், மாதவிடாய் கால வயிற்றுவலி அற்புதமாகக் குணப்படுத்தப்படும். வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம், வங்களாவடி, வேலணை. 5818

## வாடகைக்கு

3 அறைகளுடன் பகுதிவீடு. இளம் தம்பதிகளுக்கு, உத்தியோகஸ்தர்களுக்கு, 19. கடைச்சாமி வீதி, யாழ்ப்பாணம்.

5846

## கல்வி

லண்டன் (சிற்றி-கில்ட்ஸ்) எலெக்றிக்கல் என்ஜினியறிங் வகுப்புகளுக்குஸ்ரீசத்தியநாதன் (எந்திரவியல் விரிவுரையாளர்) யாழ்ப்பாணக் கல்வி நிலையம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5843

சிறந்த முறையில்

கமரா

திருத்துவதற்கு

A.S.குலசேகரன்

கஜேந்திரா ஸ்ரூடியோ

40/A, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

5847


## கி. சேவையாளர் கோரிக்கைவெற்றி

கொழும்ப, சனி

கிராம சேவகர்களின் தொழிற்சங்கங்கள் நீண்டகாலமாக விடுத்துவந்த பதவி உயர்வுசம்பந்தமான கோரிக்கையை பொது நிர்வாக அமைச்சு ஏற்றுக்கொண்டுள்ளது. இத் தகவலை அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின இன்று அறிவித்தார்.

எழுதுவினைஞர்தேர்வு முதலாம் தரத்துக்கு தோற்றுதல், ஆர். டி. ஓ. (அபிவிருத்தி உதவியாளர்கள்) நியமனம் போன்ற கோரிக்கைகள் தற்போது அங்கிகரிக்கப்பட்டுள்ளது. இதனுல் நாட்டிலுள்ள 4200 கிராமசேவையாளர் பயனடைவர்.

(ஆ)



# வேலைக்காரச் சிறுமி வீட்டுக்குப் போகிறாள் !

**'மனித உரிமைகள், சுதந்திரம், இன விடுதலை என்றெல்லாம் நம்மவர்கள் பேசிக்கொள்ளும் இந்தக் காலத்தில்தான் இப்படியான அநீதிகளும் நடக்குது. அதுவும், நம்மவர்களே-படித்தவர்களே செய்கிறார்கள் என்றால் என்ன சொல்வது?'**

சந்தியில் திரும்பியதும் காரை கிராமத்தின் உள் வீதிக்குள் திருப்பி ஒரு சாதாரண கொட்டில் வீட்டின் வளவுக்குள் செலுத்தி நிறுத்தினார் டாக்டர் சிவப்பிரகாசம்.

வீட்டினுள்ளிருந்து ஆரவாரத்துடன் ஓடிவந்த சிறுவர்கள் காரின் அருகில் வந்ததும் வாயடைத்துப் போய் நின்றுவிட்டார்கள். வளவின் பின்பக்கம் நின்ற நடுத்தர மனிதர் ஒருவர் மிகவும் மரியாதையுடன் அவசர அவசரமாக ஓடிவந்து காரின் அருகில் நின்றார். அவர் முகத்தில் பல்வேறு உணர்ச்சிகள் பிரதிபலித்துக்கொண்டிருந்தன. ''எப்படி சுகமே'' என்றார் டாக்டர் சிவப்பிரகாசம், காருக்குள்ளிருந்தபடியே.

''ஓம் ஐயா, இருக்கிறோம்'' என்றார் அந்தமனிதர்.

டாக்டர் காரின் பின் சீட்டின் பக்கம் திரும்பி அங்கு அமர்ந்திருந்த சிறுமியைப் பார்த்துவிட்டு ''இவ கொஞ்ச நாளைக்கு இங்கே நிற்கட்டும்-பிறகுவந்து கூட்டிப்போகிறேன்'' என்றார்.

''அதற்கென்ன நிற்கட்டும் ஐயா'' என்றார் அவளின் தந்தை.

காரின் பின் கதவைத்திறந்துவிட்டார் சிவப்பிரகாசம். சிறுமி மெதுவாக இறங்கினாள். இறங்கியவள் ஒரு தடவை டாக்டரை வேதனையுடன் பார்த்தாள். அவள் கண்கள் கலங்கிப்போய் இருந்தன. முகத்தை அவள் திருப்புவதற்குள் கண்ணிலிருந்து ஒரு துளி கண்ணீர் அவளது பிஞ்சுக் கன்னத்தின்மீது விழுந்து உருண்டது.

நான் உடனே திரும்பி டாக்டரைப் பார்த்தேன். அவர் என் பார்வையை எதிர் கொள்ளாமல் வேறு எங்கோ பார்ப்பது போல் பாசாங்கு செய்தார். என்றாலும் அவரது கண்களின் ஓரங்களில் மினுமினுத்துக் கொண்டிருந்த நீர்த்திரையை நான் கவனிக்காமல் இல்லை.

சிறுமி முற்றத்தில் ஏறி வீட்டுக்குள் நுழையும் அதேசமயம் பின்னால் திரும்பி எங்களைப் பார்த்தாள். அதே சமயம் டாக்டர் காரை அவசரமாகத் திருப்பி ஓட்டத் தொடங்கிவிட்டார்.

''நெஞ்சம் அலைமோதவே
கண்ணும் குளமாகவே
ராதை
கண்ணன்மேல் கோபமாய்ப்
போகிறாள்...''

என்ற இனிய பாடல் எங்கிருந்தோகாற்றில் மிதந்து வந்து மோதிச்சென்றது.

டாக்டர் ஒன்றுமே பேசவில்லை. அவரது மனநிலை எனக்குத் தெரியும் அதனால் நானும் பேசாமலே இருந்துவிட்டேன்.

●

டாக்டர் சிவப்பிரகாசம் பெரிய இடத்து மனிதர்தான். அதாவது பூர்வீகமான பெரும் சொத்துஇல்லாவிடினும் மனிதனின் அந்தஸ்தைக் குறிப்பதாகக் கருதப்படும் சாதி, சமூகம், நடையுடை,பாவனைகள்எல்லாவற்றிலும் அவர் ''தரமான'' நிலையிலிருந்து வளர்ந்தவர்.

மனிதனை இவ்வாறு எல்லாம் மதிப்பீடு செய்வது மனித பலவீனத்தைக் காட்டுவதாகும் என்று அவர் உணராதவரல்ல. இன்று இருக்கும் சமூகநிலைமை நாளை மாறலாம், என்ற சமூக தத்துவம் புரியாதவருமல்ல. ஏனென்றால் அவர் இளைஞனாக கல்லூரியில் வாசித்துக்கொண்டிருந்த காலத்தில் சமூக ஏற்றதாழ்வுகள், சீர்கேடுகள் பற்றியெல்லாம் காரசாரமாக வாதித்ததுண்டு. அது பள்ளி வாழ்க்கையோடு போய்விட்டாலும், சமூக வாழ்வில் அந்த இளமைக்கால நம்பிக்கைகள், கோட்பாடுகள் ஓரளவாவது தாக்கத்தை ஏற்படுத்தாமலிருக்க முடியாதல்லவா! அதனால் நசுக்கப்பட்ட, ஏழ்மையில் உழலுகின்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இந்த வேலைக்காரச் சிறுமியிடம் அவர் மிக பரிவோடு நடந்துகொண்டது ஒன்றும் எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. ஆனால் இன்று அவளது வீட்டில் கொண்டுவந்து அவளை சேர்ப்பித்துவிட்டுத் திரும்பும்போது கண்கலங்கும் அளவுக்கு அவள்மீது அவர் பாசத்தை வளர்த்துக்கொண்டிருப்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

●

''அடுத்தவீட்டில் இருக்கும் எஞ்சினியர் கருணாகரனைத் தெரியுமா உமக்கு!'' டாக்டர் இப்படி திடீரென என்னிடம் கேட்டார். நான் அவர் பக்கம் திரும்பி தலையைமட்டும்அசைத்துத் தெரியாதென்றேன். காரின் வேகத்தைக் குறைத்துக் கொண்டு அவர் பேசலானார்.

''எஞ்சினியர் கருணாகரன் வீட்டில் ஒரு சிறுமியிருக்கிறாள். அவளை மிகவும் மோசமாக அவர்கள் நடத்துகிறார்கள். அவர்மனைவி அவளைக் கொடுமைப்படுத்துவது கருணாகரனுக்குத் தெரியாமலில்லை நான் கூட சில சமயங்களில் நாசுக்காக இப்படிசெய்யாதீர்கள் என்று சொல்லிப் பார்த்தேன். ஆனால் அவர்கள் அது ஒரு பெருமைக்குரிய விஷயமபோல நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். சாப்பாடும் சம்பளமும கொடுக்கிறோம் என்பதற்காக நாயைவிட மோசமாக வேலைக்காரரை அதுவும் சிறுவர்களை நடத்தும் இப்படியானவர்கள் மீது எனக்கு அபிமானமே கிடையாது'' என்றார்.

இதையேன் இப்பபொழுது சொல்கிறார் என்று நான் சிந்திப்பதற்கு முன்பே அவர் மீண்டும் சொன்னார்.

அவர்கள் சில சமயங்களில் வெளியில் படத்துக்கு அல்லது உலாவுவதற்கு ஏதும் போகிறார்கள் என்றால் வேலைக்காரச் சிறுமியை ஒரு டிறம்முக்குள் போட்டு மூடிவைத்துவிட்டு வீட்டையும் பூட்டிக்கொண்டு போவார்கள். திரும்பி வரும் வரை அவள் அப்படியேகிடக்க வேண்டியதுதான.

மனித உரிமைகள்- சுதந்திரம்- இனவிடுதலை என்றெல்லாம் நம்மவர்கள் பேசிக்கொள்ளும் இந்தக் காலத்தில்தான் இப்படியான அநீதிகளும் நடக்குது. அதுவும் நம்மவர்களே - படித்தவர்களே செய்கிறார்கள் என்றால் என்ன சொல்வது?'' என்று கேட்டுவிட்டு சிவப்பிரகாசம் என்னைப் பார்த்தார். பிறகு திரும்பிக்கொண்டு எக்ஸிலேட்டரை அழுத்தி காரின் வேகத்தைக் கூட்டினார்.

நான் மாதினியைப், பற்றி யோசித்தேன்.

அவளை டாக்டர் வீட்டார் மிகவும் சுதந்திரமாகவே நடக்க அனுமதித்திருந்தார்கள். டாக்டரும் மனைவியும் வெளியில் செல்வதானால் அவளையும்கூடவேஅழைத்துப் போவார்கள். தம் பிள்ளைகளுக்குள்ள சலுகைகள் எல்லாம் அவளுக்கும் உண்டு.

படித்தவர்கள்-பண்பானவர்கள் என்று சொல்வதைவிட மனித மனதைக் கௌரவிக்கும் பெருந்தன்மையுடன் அவர்கள் நடந்துகொண்டார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். இது எல்லாருக்கும்ஏற்பட முடியாத ஒரு பண்புதான்.

உணவு, சிற்றுண்டி, தேநீர் விடயங்களிலும்கூட அவர்கள் அவளுக்கு வேறுபாடு காட்டியதை நான் கண்டதில்லை.

ஒரு நாள் விருந்துக்குச் சென்றிருந்தேன். பகல் சாப்பாட்டிற்குப் பிறகு திருமதி சிவப்பிரகாசம் எல்லாருக்கும் 'சாக்லேட்' பரிமாறினார். எங்கே மாதினியை மறந்து விடுவாரோ என்று நினைத்தேன் - இல்லை - அவளுக்குப் பிறகுதான் எனக்கும் டாக்டருக்கும் 'சாக்லேட்' கிடைத்தது.

இப்படி நடத்தினால் வேலைக்காரர் கெட்டுப்போய்விடுவார்கள் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் எல்லாருமே ஒரே மாதிரி இருக்கமுடியுமா?

அவர்கள் நடத்துவதற்கு ஏற்ப மாதினியும் நடந்து கொண்டாள். அவர்கள் காட்டிய அன்புக்கு ஏற்றாற்போல் விசுவாசமாக அவள் இருந்தாள் செய்யக்கூடிய வேலைகள் அனைத்தையும் திருமதி சிவப்பிரகாசம் சொல்லுமுன்பே அவள் செய்து முடித்துவிடுவாள்.

சிட்டுக் குருவிபோல் அவள் ஓடியாடி டாக்டருக்குப் பணிவிடை செய்வதுபோல்தன்னால் முடியவில்லையே என்று திருமதி சிவப்பிரகாசத்துச்கு ஒருவித பொறாமை உண்டுதான்-ஆனால் அதுவே அவள்மீது அவருக்கு ஏற்பட்டிருந்த அதித அன்புக்கு காரணம் என்றும் சொல்லலாம்.

'பனனீரன்'

இந்த நிலைமையில்தான் டாக்டரின் உறவினரான ஒரு மூதாட்டி ஊரிலிருந்து டாக்டரின் வீட்டுக்கு வந்து சில நாள் தங்கினார்.

தெய்வ நம்பிக்கை, கோவில் குளம், ஆசாரங்கள் அனைத்திலும் அந்த அம்மையாருக்கு அளவு கடந்த ஈடுபாடு.

காலையில் குளித்துமுழுகி சுவாமிக்குப் பூஜைசெய்யாமல் சாப்பிடமாட்டார். புனித நாட்களில் விரதம் இருந்து கேளாரம்டாடி கோயில் தரிசனம் இல்லாமல் அவரால் பொழுதைக் கழிக்க இயலாது.

ஆசார சீலராகிய அந்த மூதாட்டி, டாக்டர் வீட்டுக்கு வந்தகையோடு முதல்முதல் செய்த காரியம் இந்தச் சிறுமி யாருடைய பிள்ளை,குலம்கோத்திரம் என்னஎன்பதை ஆராய்ந்ததுதான்!

தெய்வ பக்தியும், ஆசார அனுட்டானங்களும் எவ்வளவுக்கு அதிகமிருந்ததோ அந்த அளவுக்கு ஜாதிபேதம்,உயர்வு தாழ்வு என்பவைகளிலும் அவருக்கு நம்பிக்கை இருந்தது. அதனால் மாதினியின் பூர்வோத்திரம் அனைத்தையும் மிக எளிதில் கண்டுபிடித்துவிட்டார்.பிறகுகேட்பானேன்?

குலம்போச்சு, கோத்திரம் போச்சு, ஆசாரம்போச்சு, அந்தஸ்து போச்சு, மானம் போச்சு மரியாதை போச்சு என்று ஒப்பாரியில் ஆரம்பித்துவிட்டார்.அதோடு நிற்கவில்லை, தெரிந்தவர்கள், அறிந்தவர்கள், வந்தவர்கள் போனவர்கள் என்று டாக்டர் வீட்டோடு சம்பந்தப்படும் எல்லாருக்கும் இந்த, 'அநியாயத்தை' சொல்லி அழத்தொடங்கினார். அத்துடன் விடவில்லை.'இந்தப் பெட்டை இந்தவீட்டில் இருக்கும்வரை ஒருசொட்டுத் தண்ணீர்கூட குடிக்கமாட்டேன்' என பிடிவாதத்தில் இறங்கினார்.

வேண்டியவர் - ஒரு காலத்தில் டாக்டரின் கல்வி வளர்ச்சிக்கெல்லாம் உதவியவர். உறவினர்மத்தியில்செல்வாக்குள்ள மூதாட்டி- பகைத்துக்கொள்ள முடியவில்லை.

அதன்விளைவுதான், இன்று அந்தப்பிஞ்சு மனம் கொண்ட சிறுமி அழுத கண்ணீரோடும் விம்மிய மனத்தோடும் வீட்டுக்குப் போகிறாள்!

●

டாக்டர் மீண்டும் என்னைப் பார்க்கிறார். அவர் கண்கள் மீண்டும் கலங்கிப்போய் இருக்கின்றன. ஆனால் அதை அவர் மறைத்துக்கொள்கிறார்,

'இந்த உலகத்தை நம்மால் திருத்தமுடியாது மிஸ்டர்' என்று அவரே பேசலானார்.

'உலகம் திருந்தும் என்று காத்திருந்தால் இன்னும் நூறு ஆண்டுகள் சென்றாலும் திருந்தமாட்டாதுதான்'' என்றேன் நான் ஏதோ பெரிய சமுதாயப பிரச்னைகளை ஆராய்ந்து தெரிந்தவன் போல.

'அடுத்துவரும் தலைமுறையினர் நம்மைவிட சற்று விசாலமான மனமுடையவர்களாய் இருப்பார்கள்' என்றார் அவர்.

'அதற்காக சமூகத்தில் புரையோடிப்போன பிரச்னைகளுக்கு வெறும மனமாற்றத்தை மட்டும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கமுடியாது' என்றேன் நான்.

'அப்படியானால்?' டாக்டர் கேட்டார்.

'நமது இளைஞர்கள்' என்று நான் ஆரம்பித்தேன்.

'நமது இளைஞர்கள் மனம் மாறவேண்டும். அப்பொழுது பழைய சம்பிரதாயங்களை-சமூகததுக்கு உதவாத கொள்கைகளை எல்லாம் ஒழித்துவிடமுடியும' என்றார் டாக்டர்.

'அப்படியல்ல டாக்டர், சமுதாயத்தின் அடிப்படை அமைப்பை நோக்கவேண்டும். ஒரு ஏழை தன் பிள்ளையை இன்னொருவர் வீட்டில் வேலைக்கு அமர்த்தவேண்டிய நிலைமை ஏன் ஏற்படுகின்றது? அந்த நிலைமையை மாற்றுவது தான் சமுதாயப் புரட்சிக்கு முதற்படியாகவிருக்கும்' என்றேன் நான்.

அவர் என்னைப் புதுமாதிரியாகப் பார்த்தார். நான் பேசமுற்படும் பொருளாதாரத்தத்துவம் ஒன்றும் அவருக்குத் தெரியாததல்ல. ஆனால் அதை எல்லாம் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளும் அளவுக்கு அவருக்கு துணிச்சல் இல்லை என்றுதான்சொல்லவேண்டும்.

'பொருளாதார அமைப்பை மாற்றியமைக்கக்கூடிய அரசியல் அதிகாரம் இன்றெல்லாம் சாதாரண மக்கள் கையில்தான் இருக்கின்றது. ஆனால் அதனை அவர்கள் சிந்திக்கிறார்கள் இல்லை. தற்காலிக சொற்ப வருவாய்க்காக சோரம் போய்விடுகிறார்கள்' என்று நான் மேலும் சொல்லிக்கொண்டிருந்தேன்.

கார் பிரதான வீதியில் திரும்பிப்புறப்பட்டது. டாக்டர் சற்றுமுன் உணர்ச்சிவசப்பட்டதையெல்லாம் மறந்துவிட்டவர் போல் காணப்பட்டார்.

நான் எனக்குள் சிரித்துக்கொண்டேன்.

(யாவும் கற்பனை

## தலைவனினி நீர்தான் தனித்து

—கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை—

கண்ணாளா நல்ல கவியாளா காதலிசைப்
பண்ணாளா என்றன் பதியாளாய்-பெண்ணாளும்
முன்குணத்தைத் தள்ளும் முறையிந்நாள் முற்
போக்குக்
கன்னியெனை வந்தணைந்தே காண்

பேனு முனைநட்புப் பேரோர் பலம்மிக்க
தேனார் மொழியென்றே செப்புமுயர்-நாரே
பலகடையும் ஏறிவரும் பாவை, எனக்கோ
தலைவனினி நீர்தான் தனித்து

மினியுடையின் மேன்மை மிடுக்கான பேச்சுத்
தனிநடைகொள் அச்சமிலாத் தன்மை - எனதழகை
ஈட்டுமுயர் மைப்பூச்சு லாடனுயர் சப்பாத்து
காட்டுமுயர் என்மகிமை காண்

பேதை பெதும்பையெனப் பெண்முன் பிறபெயரோ
வாதை தருமெனக்கே! வாழ்த்தாதீர்-கோதை
யெனும்
காரணப்பேர் சொல்வரெனக் கத்தரித்தேன்
கூந்தலினை
பேரமைப்பீர் வேறுவிதம் பின்

பெண்ணின் சமநிலையைப் பேசும் கவியாளும்
உண்மை யுளனென்றே உங்களையான்-எண்ணி
மணவாள னய்வரித்தேன் வாருங்காள், வந்தால்
கணவன்பேர் உங்களுக்கே காண்.




# பிரார்த்தனை என்பது என்ன?

பிரார்த்தனை என்பது என்ன? நமக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள, எல்லாம் வல்ல இறைவனுடன் நாம் தொடர்பு கொண்டு... மயப்பட்டு, அவரது சக்தியையும் அருளையும் பெறக்கூடியதற்கான ஒரு வழியேயாகும்.

நாம் செய்யும் சில காரியங்கள் தவறானவை என்பது நமக்குத் தெரிந்தும் அத்தவறுகளை மேலும் விடாமல் செய்து கொண்டே இருக்கிறோம். இதிலிருந்து நமது மனம் எவ்வளவு பலவீனமானதென்பதையும் ஆசைகளை எதிர்த்து நிற்க நம்மால் முடியவில்லையென்பதையும் உணர்கின்றோம்.

மனதை வெல்லக்கூடிய சக்தி நமக்கு ஏற்படவேண்டுமாயின அது எல்லாம் வல்ல இறைவனிடம் நம் மனம் பிரார்த்தனை மூலம் லயப்படுவதாலேயே கைகூடும். பிரார்த்தனை வழியாக இறைவனுடன் தொடர்பு கொண்டு அவரது அருள் ஒளியை நாம்பெறுவதால், நமது பலவீனங்களிலிருந்து நம்மை அது விடுதலைசெய்யக் கூடியதாக இருக்கும்.

மனதை அடக்கி நாம் விடுதலையும் சாந்தியும் பெற, நாம் பின்பற்றவேண்டிய ஒழுக்க நெறிகள் என்ன?

1. சத்தியம். எப்போதும் உண்மையே பேசவேண்டும். பொய்சொல்லக் கூடாது.

2. அஹிம்சை அல்லது இன்னா செய்யாமை. வன்முறைச் செயல்மட்டுமல்ல, பிறருக்கு மனதாலும் தீங்கு நினையாமை. மனம், வாக்கு, காயத்தால் அஹிம்சா தர்மத்தின்படி ஒழுகுவது.

3. கள்ளுண்ணாமை. பிறர் பொருளை இச்சிப்பதும்கூட களவுதான். பிறருக்கு ஏதாவது இலாபம் கிடைக்கும்போது நாம் பொறாமைப்படுவது இயல்பு. நமக்கே அந்தச்செல்வம் கிடைக்கவேண்டுமென்றும் விரும்புகிறோம். அப்படிக் கருதாமல் மற்றவருக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் நமக்கே கிடைத்ததுபோல் நினைத்து நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.

4. பொருள்களில் பற்றின்மை. ஏதாவது பொருளை இழந்தாலும் அதைப்பற்றி கவலைப்படக்கூடாது. அதாவது அது எங்கிருந்து வந்ததோ அங்கேயே திரும்பிவிட்டதென்றும்; கடவுள் கொடுத்தார், அவரே எடுத்துக்கொண்டுவிட்டார் என்றும் கருதவேண்டும். ஒரு பொருள் நம்மிடம் உள்ளவரை அதில் பற்றின்றி வைத்திருக்கவேண்டும். இந்த உலகுக்கு வந்தபோது வெறுங்கையுடனேயே வந்தோம். போகும் போதும் எதையும் கொண்டு செல்லவும் முடியாது. இதனால் எதுவும் நமக்குச் சொந்தமானதல்ல. ஆகவே, இந்தச் சிறிய இடைக்காலமாகிய வாழ்க்கையில் நாம் எந்தப் பொருளிலும் மக்களிலும் ஏன் பற்றுதல் வைத்துக்கொள்ள வேண்டும்? அதை இழக்கும்போதோ அல்லது அவர்கள் நம்மைவிட்டுச் செல்லும்போதோ நாம் ஏன் அழவேண்டும்?

5. பிரம்மசரியம் அல்லது பிரம்மத்தில் வாழ்வது. பிரம்மசரியமென்பது ஆண் - பெண் உறவைப்பற்றியது மட்டுமல்ல அதாவது பிரம்மத்தில் நமக்குள்ளே இருக்கும் கடவுளில் வாழ்வது. உலகம் எல்லாம் கடவுள் மயம். இதை உணர, பெண்ணாசையை மறக்கவேண்டும். எங்கும் எல்லாம் இறைவன் மயமாக உணர்ந்தபின் வேற்றுமைக்கு இடமேது? பிரம்மமென்பது பால் வேற்றுமை அற்றது. நீங்களே பிரம்மமென்பதை உணர்ந்துவிட்டால், உங்களுக்கும் மற்றவர்களுக்கும் என்ன வேற்றுமை? எல்லாம் பிரம்ம மயம்.

மேற்குறித்த ஐந்து அறங்களையும் பயில முயலவேண்டும். இதில் வெற்றிபெற இறைவனின் அருள் முக்கியமாகும்.

இந்த நெறியின்படி நடந்தாலே தெய்வத்தை நாம் நெருங்கமுடியுமென்பது தெரிந்தும், அவ்விதம் நடக்க நம்மால் முடியாமலுள்ளது. இந்த நெறியில் நிற்கும் உறுதியும், வைராக்கியமும் நமக்கு வருவதில்லை. மிக பலவீனமாக இருக்கிறோம். அந்த நெறியில் செல்லும்போது வழுக்கி விழுந்துவிடுகிறோம். அவ்வித சமயத்தில் நாம் தாழ்மையுடன்பிரார்த்தனை செய்யவேண்டும். "கடவுளே! தங்களிடம் கொண்டு செல்லக்கூடிய வழியில்நடந்து செல்லவும், தடைகளை எல்லாம் நீக்கி, தடுக்கி விழுந்துவிடாமல் நடந்துவர நீங்களேஎனக்குப்பலம்அளிக்க வேண்டும்'' என்று பிரார்த்தனைசெய்யவேண்டும்.

பிரார்த்தனை நமக்குக் கடவுளுடன் நேர்முகத் தொடர்பு அளிக்கிறது. அவரிடமிருந்து நமக்கு சக்தியும், இன்பமும் கிடைக்கிறது. அதனால் நாம் தடுமாறாமல் தைரியமாக நடந்து அந்த நெறியில் செல்ல முடிகிறது. பிரார்த்தனை சக்தி அபாரமானது. பிரார்த்தனை மூலம் நாம் கடவுளுடன்கொள்ளும் தொடர்பு நமக்கு பலமும் தைரியமும் அளிப்பதாகும். எல்லாவிதமான தடைகளையும் வென்று, நாம் பேரின்பம் பெற அது வழிசெய்கிறது.



"அமைதியையும் விடுதலையும் வெளியிலே தேடாதீர். உண்மையான விடுதலை மனதைப்பற்றியதே. நமக்குள்ளே வசிக்கும் தெய்வத்துடன் நாம் லயப்படும்போதே இன்பம் கூடுகிறது''

சுவாமி ராம்தாஸ்

---

இலங்கை அரசை புரட்சி சதிசெய்து கவிழ்க்க முயற்சித்தார் என குற்றம் சாட்டப்பட்டிருந்த கடற்படை தளபதி திரு றோய்ஸ் டீ மெல், ஒரு வருடத்திற்கு மேலாக தலைமறைவாக இருந்தார். அவர் எங்கு தலைமறைவாக இருந்தார் என்பது எவருக்கும் புரியாத புதிராக இருந்தது. வல்வெட்டித்துறையால், வெளிநாட்டுக்கு சென்றுவிட்டார் என்றே எங்கும் பேச்சாக இருந்தது. அவர் கடலில் குதித்து உயிரை மாய்த்துக்கொண்டார் என்றும் அரசே, அவரை முடித்துக்கட்டி விட்டதாகவும் கூட பேச்சுக்கள் அடிபட்டது.

நாடெங்கும் அரசு தேடுதல் நடத்தியது. இரகசியப் பொலிஸார் திக்கெல்லாம் சென்று விசாரணை நடத்தினர். பயன் கிடைக்கவில்லை. கடைசியில் அவரில்லாமலே, நீதிமன்றத்தில் புரட்சி சதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

61ம் ஆண்டு, முதல் கடற்படை தளபதி றோய்ஸ் டீ மெல்லை காணவில்லை. பெரும் மர்மமாக இருந்தது. அச் சதியில் அவருக்கும் முக்கிய பங்கு இருந்ததாகக் கூறப்பட்டது. ஒரு வருடமாக அவரை தேடினார்கள். பின் 62ம் ஆண்டு இறுதியில் ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் 3 நீதிபதிகள் முன்விசாரணை ஆரம்பமானது.

# நீதி மன்றத்தி... ஜி ஜி. யின் ...

ஜி. ஜி. ஆஜரானர்

எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் ஜி. ஜி. ஆஜரானர். விசாரணையைப் பார்ப்பதற்கு, பெருந்திரளான கூட்டம்.

இவ்வழக்கை விசாரணை செய்ய நீதிமந்திரியினால், நீதியரசர் ரி. எஸ். பெர்னண்டோ, நீதியரசர் ஜி. பி. ஏ. சில்வா, நீதியரசர் பி. சிறிஸ்கந்தராசா ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இக் குழுவிற்கு நீதியரசர் ரி. எஸ். பெர்னண்டோவே தலைமைதாங்கினர்.

இவ்வழக்கிற்கென நீதியரசர் சில்வாவும், நீதியரசர் பி. சிறிஸ்கந்தராசாவும், புதிதாக நீதியரசர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

விசாரணை ஆரம்பமானதும் ஜி.ஜி. தனக்கே உரிய பாணியில் எதிரிகள் சார்பில் ஒரு சட்டப் பிரச்னையைக் கிளப்பினர்.

தனித்தனியான 3 நீதியரசர்களை, ட்ரயல் அட்பார் நீதியரசர்களாக ஒருமித்து நியமிக்க நீதிமந்திரிக்கு அதிகாரம் இல்லை-இதுதான் ஜி.ஜி. கிளப்பிய சட்டப்பிரச்னையாகும்.

சட்டப்படி நீதியரசர்களை, பிரதம நீதியரசரே நியமிக்கலாம் என்று ஜி. ஜி. சுட்டிக் காட்டினர்.

இச் சட்டப்பிரச்னை பல தினங்களாக விவாதிக்கப்பட்டது. நாடெங்கும் இந்த வழக்குப்பற்றியே பேச்சாக இருந்தது. பத்திரிகைகள் எல்லாம், இந்த வழக்குப்பற்றியே முதற்பக்கத்தில் செய்திவெளியிட்டன. உலக நாடெங்கும் இவ்வழக்கு பற்றியே பேச்சாக இருந்தது.

## றோய்ஸ் டி மெல் எங்கே?

அன்று ஒரு வியாழக்கிழமை எதிரிகள் வரிசையில் ஒருவ...

---

காட்சி-2

(தொடர்ச்சி)

நாடகம்

# சிட்டுக்குருவியும் பருந்தும்

சொக்கன்

சந்திர- மிச்சம் சந்தோஷம்... பைத வே... உங்கடை அண்ணை இப்ப எங்கை இருக்கிறர்... யாழ்ப்பாணத்துக்கு ராஜசாலை வந்தப்பிறகு அவரைப்பற்றி ஒரு செய்தியும் கிடைக்கேல்லை. யூ.கேயிலை இருக்கும்போது அவ்வப்போது காயிதம் போடுவார். நானும் போடுவன்... இப்ப ஒரு தொடர்பும் இல்லை...

சுப்பு- அவரும் சுன்னுகத்திற்கு மாறிவந்திட்டார்... எண்டு கேள்வி...

சந்தி-ஓ...வட் ...ஏ... ஹப்பி நியூஸ்... நான் யூ. கேயிலை இருந்து வந்தபிறகு யாழ்ப்பாணம், கொழும்பு எண்டு ஓடித்திரிஞ்சதிலை ஆளைக்காண முடியாமல் போயிட்டுது... அது சரி...மாறிவந்திட்டார் எண்டு கேள்வி என்கிறீர்... அவரோட இன்னும் சமாதானமாகவில்லையோ...

சுப்பு- நயவுசெய்து அந்தக் கதையை எடுக்காதீங்கள் டொக்டர். அவருக்கும் எங்களுக்குமிடையிலை பற்று, பாசம் எல்லாம் அறுந்துபோயிட்டுது. இனி அதை முடிய ஏலாது... அது ஒரு கனவு... பயங்கரக் கனவு...

சந்தி- சுப்பிரமணியம்... ராஜாவை எனக்கு நல்லாய்த் தெரியும். அவர் நல்லமனிசன். புகுந்த இடந்தான் அவரை கெடுத்துப்போட்டுது. அவர் உங்களை நினைச்சு ஏங்காத நாளேயில்லை...

சுப்பு- டொக்டர்... இயற்கையிலேயே, கொடுமையானவர்களாலை அவ்வளவு ஆபத்து இல்லை. ஆனால்... கோழைகளாய் இருப்பவர்கள்தான் ஆபத்தாய் இருப்பார்கள். அவர்களுக்கு சுயநலமுங்கூட.... தங்களுடைய சுயநலத்துக்காக என்னவும் செய்வார்கள்...

சந்தி- நீர் சொல்றது சரிதான்... ஆனால் அவர் உங்கடை சகோதரர். ஒருரத்தம்... பிரியிறது சுகம்... ஆனால்... சேர்ந்து வாழ்வது தான் கஷ்டம்...

(சுப்பு கண்கலங்க வெளியே பார்க்கிறான்)

சந்தி- என்ன பேசாமலிருக்கிறீர்...ஓ...உமது கண் கலங்கியிருக்குதே... அண்ணையை நினைச்சுத்தானே... இதுதான் இரத்தபாசம்...

சுப்பு- வீட்டில் ஒரு பசுவை வளர்க்கிறம்... மேயப்போன அது மாலையாகியும் திரும்பேல்லை, எங்கள் மனம் எவ்வளவு பாடுபடுது... பசி, தாகத்தை மறந்து அதைத் தேடிக் கண்டுபிடித்தபிறகு தான் அமைதியாய்ப் பெருமூச்சு விடுறம்... டொக்டர்... நீங்கள் சீவியம் முழுவதும் நகரவாசி... கிராமவாசிகளான எங்கள் உணர்ச்சிகள் உங்களுக்கு விளங்க நியாயமில்லை. டொக்டர்! சின்ன வயசிலை நான் அன்பாய் வளர்த்த கன்றுக்குட்டியை லொறிதட்டி, அது செத்ததுக்காக நாலுநாள் தொடர்ந்து நான் அழுதிருக்கிறன்... டொக்டர். ஒருகிழமை வரை சரியாகநான் சாப்பிடவும் இல்லை...

சந்தி- (மௌனமாய் இருக்கிறர்)

சுப்பு- சாதாரண மிருகம் ஒன்றுக்காகவே தவிக்கிற எங்கடை மனம், அண்ணனுக்காக எவ்வளவு தவிக்கும் எண்டு...

(விம்மியழுகிறன்)

சந்தி- சுப்பிரமணியம்... டோன்ட் பீ சைல்டிஷ்... அழாதேயும்... நான் இராசரத்தினத்துக்கு எல்லாம் சொல்லிறன்.

சுப்பு- அப்படிச் சொல்லேக்கை இதையுஞ் சொல்லுங்கோ டொக்டர்... அக்காவிற்கு வருகிறஆவனியில் மரீஜ் ஒழுங்காகிவிட்டது என்று சொல்லுங்கோ.

சந்தி- அதை மட்டுமா சொல்லுவன்... அவவுக்கு யுவலறிஸ் போடிற பொறுப்பும் உம்முடையதுதான் என்டுஞ் சொல்லுவன்...

சுப்பு- நோ...நோ... டொக்டர்... இந்த உடலிலை உழைக்கிற சக்தி உள்ளவரை என் அக்காவின்ரை கலியாணத்துக்கு வேறு ஒருவரும் ஒருசதங்கூடச் செலவழிக்க வேண்டியதில்லை.

சந்தி- சரியான பிடிவாதக்காரராயிருக்கிறீரே...

சுப்பு- என்ரை அம்மா பெரிய பிடிவாதக்காரி. அவவின்ரை குணம், ஒரு கொஞ்சமாவது எனக்கு இருக்காமலா போகும்? டொக்டர் தம்முடைய தங்கையின்ரை கலியாணத்துக்கு அவர் வருவதை நாங்கள் ஒருதரும் தடுக்கமாட்டம். ஆனால் அவரின்ரை வீட்டுப்படி ஏறி அழைப்பது மட்டும் எங்களாலை முடியாது எண்டுஞ் சொல்லுங்கோ.

சந்தி- இப்ப இப்படித்தான் சொல்வீர். உங்கடை சொந்தக்காரரின்டை பிறெஷர் உம்மை அவரைத்தேடிப்போக வைக்கும்...இருந்து பாரும்... சரி நேரமாகுது.

Shall I make a move?

சுப்பு- பார்ப்போம்... இது தான்... எங்கடை ஒழுங்கை முடக்கு... டொக்டர். வீட்டிற்கு வந்துபோகலாமே...

சந்தி- அவசியம் வருவேன்.

(காரை நிறுத்துகிறர்)

சுப்பு- நல்லது டொக்டர்... வணக்கம்.

சந்தி- சுப்பிரமணியம்... இப்ப செந்தியின் உடல் அரைவாசி எரிந்திருக்கும். எல்லாரும் திரும்பிக்கொண்டிருப்பினம். செந்தியின்ரை பெயரே இன்னுஞ்சில நாளிலை மறக்கப்பட்டுவிடும். உறவு, பாசம், பந்தம் எல்லாம் இவ்வளவு தான். இல்லையா. இதுபற்றி உங்கடை தமிழ்ப்புலவர்கள் என்ன சொல்லியிருக்கினம்?

சுப்பு-

ஊரெல்லாங்கூடி ஒலிக்க
அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று
பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக்
கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்
பொழிந்தார்களே.

இப்படி நான் முதலிற் சொன்ன திருமூலர் பாடியிருக்கிறர்...டொக்டர்...

சந்தி- 'நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே'... நல்லாயிருக்குது... தற்ஸ் லைவ் நோ...? சரி நான் வரட்டுமா...

சுப்பு- (சிரித்தபடி) சுருக்கமாய்ச் சொல்லிப் பெரிசாய்ச் சிந்திக்க வைச்சிட்டியள்... டொக்டர்... நன்றி போய் வாருங்கோ...(போகிறர்)

—திரை—

# ...த்தில் ...ின் சாகசங்கள்

...ரைக் காணவில்லை. அவர் தான் ரேய்ஸ்டீ மெல். எதிரி இல்லாமலே, அவர்மீதும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

நீதியரசர்களும் அரசாங்க வழக்கறிஞர்களும், எதிரியான ரேய்ஸ்டீமெல், தலைமறைவாக இருப்பதாகவும், அவரைப் பிடிக்க முயற்சிகள் நடைபெறுவதாகவும் தெரிவித்தார். சில நிமிடங்கள் ரேய்ஸ்டீ மெல்லின் பேச்சாக இருந்தது.

சட்டப்புத்தகத்தில் கவனம் செலுத்திக்கொண்டிருந்த ஜி.ஜி. அதிலிருந்து விடுபட்டு நீதியரசர்களும், அரச வழக்கறிஞர் பேசுவதிலும் கவனம்

**கா. யோகநாதன்**

செலுத்தியபின் மெதுவாக சிரித்தபடி எழுந்தார்.

ரேய்ஸ்டீ மெல்லை நீதிமன்றத்திற்கு நான் கொண்டு வரட்டுமா? என ஜி.ஜி. கேட்டார். நீதியரசர்கள், அரச சட்டத்தரணி எல்லோரும் ஆச்சரியமாக ஜி.ஜி. யின் பக்கம் நோக்கினர்கள். கோட்டில் சிறிது நேரம் பரபரப்பு.

நாளை கூட்டிவாருங்கள் என நீதிரயசர் கூறினார்.

'நாளை வெள்ளிக்கிழமை கொண்டுவர வசதிப்படாது. திங்கட்கிழமை கூட்டி வருகிறேன்' என்று ஜி.ஜி. கூறிவிட்டு அமர்ந்துவிட்டார்.

இச் செய்தி வெளியானதும், கொழும்புநகர் மட்டுமன்றி நாடெங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. எங்கும் இதே பேச்சாகவே இருந்தது.

## பலத்த கண்காணிப்பு

முப்படையினரும் உஷார் நிலையடைந்தார்கள். வல்வெட்டித்துறை கடற்கரைப் பகுதி மற்றும், கரையோரப் பகுதிகள் யாவும், இரவு பகலாக பலத்த கண்காணிப்பு. கொழும்பு நகர நுழைவாயில்கள் எல்லாம் பலத்த கண்காணிப்பு. கொழும்பு நகரத்தில் சி.ஐ.டி. பொலிஸாரின் நடமாட்டம் அதிகரித்தது. ஜி.ஜி. யின் நடமாட்டங்கள் பற்றியும், சி. ஐ. டி. பொலிஸார் கண்காணித்து வந்தனர்.

ஜி. ஜி. திங்கட்கிழமை, ரேய்ஸ் டி மெல்லை, நீதிமன்றத்திற்கு கூட்டிவர முன்னரே, மெல்லை கைது செய்து விட வேண்டும் என அரசு தேவையான சகலநடவடிக்கைகளையும் எடுத்தது. சனிக்கிழமை முழுவதும் சல்லடை போட்டு தேடினார்கள். ஞாயிற்றுக்கிழமையும், இரவு பகலாக தேடுதல் நடந்தது. பயன் கிடைக்கவில்லை. அடுத்த நாள் திங்கட்கிழமை.

தொலைபேசி தொடர்புகள் ஒட்டுக்கேட்கப்படும் என ஜி.ஜி. அறிந்திருந்ததால் இவ் விஷயமாக எவ்வித தொலைபேசித்தொடர்புகளும் வைத்துக் கொள்ளவில்லை.

## 3 கார்கள் புறப்பட்டன

ஞாயிறு நள்ளிரவு மூன்று கார்கள் கொழும்புக்கு 100 மைல்களுக்கு அப்பால் ஒரு இடத்தில் வந்து நின்றன. முதல் இரண்டு கார்களிலும் பின் ஆசனத்திலும் ஆட்கள் இருந்தனர். மூன்றுவது காரில் சாரதிமட்டும்தான். திடீரென ரேய்ஸ் டீ மெல் வந்து மூன்றுவது காரில்ஏறிக்கொண்டார். அவருடன் மற்றும் சிலரும் ஏறிக்கொண்டனர். கார்கள் கொழும்பு நகரைநோக்கிப் புறப்பட்டன.

கொழும்பு நுழைவாயிலில், பலத்த பாதுகாப்பு இருந்த போதிலும், கார்கள் கொழும்பு நகருக்குள் புகுந்துவிட்டன.

ஜி.ஜி. யின் இல்லத்தில் அதிகாலையிலிருந்தே பலர் திரண்டுவிட்டனர். அவரின் சிங்கள நண்பர்கள், ஆதரவாளர்கள், உறவினர்கள் இப்படிப்பலர். சிலர் வீதியிலும் நின்று கொண்டிருந்தனர்.

## ஜி.ஜி. யின் இல்லத்தில்

சரியாக காலை 7 மணிக்கு ஜி.ஜி.யின் இல்லத்தில் 3 கார்களும் ஒன்றன் பின் ஒன்றாக வந்து நின்றன. எங்கும் பரபரப்பு ஏற்பட்டது. மூன்றுவது காரிலிருந்து ரேய்ஸ் டி மெல் இறங்கிவந்தார். வாசலில் நின்ற சிங்கள நண்பர்களின் கண்கள் கலங்கின. சிலர் தழுவிக்கொண்டனர். ரேய்ஸ் டி மெல் நேராக அவ் வீட்டின் கீழ்ப்பகுதியிலுள்ள ஜி.ஜி.யின் ஆபிஸ் அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டார். இச் செய்தி காட்டுத் தீபோல் கொழும்பு நகரெங்கும் பரவிவிட்டது. நீதிமன்றத்திற்கு வெளியே பெருந்திரளான மக்கள் கூடத்தொடங்கிவிட்டார்கள்.

மேல் மாடியிலிருந்து ஜி.ஜி. நீதிமன்ற உடை அணிந்தபடி புன்சிரிப்பு தவழ, கீழே இறங்கிவந்து தனது அறைக்குள் சென்றார்.

## 4 கார்கள் புறப்பட்டன

காலை 9 மணிக்கு ஜி. ஜி. யின் வீட்டிலிருந்து 4 கார்கள் புறப்பட்டன. முதல் காரில் ஜி. ஜி அமர்ந்திருந்தார். நீதிமன்றவளவிற்குள் ஜி. ஜி.யின் கார் சென்றது. அவர் இறங்கி நீதிமன்ற விறுந்தையில் ஏற மற்ற 3 கார்களும் வந்து நின்றன. மூன்றுவது காரிலிருந்து திரு. ரேய்ஸ் டீ மெல் இறங்கி ஜி. ஜி.யைப் பின்தொடர்ந்து சென்றார். ஜி. ஜி. அவரை எதிரிகளின் வரிசையில் அவருக்குள்ள இடத்தில் அமரச் சொன்னார்.

நீதிமன்றம் ஆரம்பமானது. 'இதோ கூட்டிவந்துவிட்டேன்' என ஜி. ஜி நீதியரசர்களுக்கு எதிரியை சுட்டிக்காட்டினார். எதிரி எழுந்துநின்று சிரம்தாழ்த்தியபின அமர்ந்து கொண்டார்.

## எங்கே இருந்தார்?

சில நிமிடங்கள் நீதியரசர்களும், ஜி. ஜி.யும் இவ்விஷயமாக தமாஷாகக் கதைத்துக் கொண்டார்கள். இவ்வளவு நாளும் எங்கே இருந்தார்? என அரசாங்க வழக்கறிஞர் கேட்டபோதும் ஜி.ஜி. பதிலளிக்கவில்லை. பேச்சைத் திசை திருப்பி விட்டார்.

இதன்பின் சட்டப்பிரச்னை பற்றிய விவாதம் தொடர்ந்து நடந்தது. கடையில் 3 நீதியரசர்களும் ஜி.ஜி. யின் சட்டப் பிரச்னையை ஏகமனதாக ஏற்று இவ்வழக்கை விசாரணைசெய்ய தங்களுக்கு அதிகாரமில்லை என தீர்ப்பளித்தனர். இதனல் அந்த நீதிமன்றம் கலைந்தது.

3 மாதத்தின் பின்னர் பிரதம நீதியரசர் எம். சி. சன்சோனி மற்றொரு குழுவை நியமித்தார். இக்குழுவில் நீதயரசர் எம். சி. சன்சோனியும், நீதியரசர் ஏச். என். சி. பெர்னாண்டோவும், மற்றொரு நீதியரசரும் இடம்பெற்றனர். பிரதம நீதியரசரே தலைமை தாங்கினார்.

விசாரணையின்போது, எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞராக ஜி. ஜி. பொன்னம்பலம் ஆஜரானார். விசாரணையின் பின் எதிரிகள் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர்.

இத்தீர்ப்பை எதிர்த்து பிறிவிக்கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யப்பட்டது. எதிரிகள் சார்பில் பிறிவிக்கவுன்ஸிலில் வழக்கறிஞர் கிரேசியன் ஆஜரானார்.

## ஜி.ஜி. யின் வாதம்

ஜி. ஜி, தமது வாதத்தின் போது, குற்றம் நடந்தால் நடந்த காலத்தில் விசாரணை செய்யவேண்டும்; புதிய சட்டங்களை அமைத்து பொருத்த முடியாது என 3 நீதியரசர்களுக்கும் எடுத்துக்கூறியிருந்தார். இதே ஜி.ஜி.யின் வாதம் பிறிவிக்கவுன்ஸிலில் எடுத்துக் கூறப்பட்டது. இந்த வாதத்தைப் பிரிவிக்கவுன்ஸில் ஏற்று எல்லா எதிரிகளையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

கடற்படைத் தளபதி ரேய்ஸ் டி மெல் ஒரு வருடகாலமாக மலை நாட்டில் உள்ள ஒரு தோட்டத்தில் வாழ்ந்து வந்தார். இந்த ரகசியம் ஜி.ஜி.க்கு மட்டுமே தெரிந்திருந்தது. இந்த இரகசியத்தை ஜி. ஜி. ஒருவருடகாலமாக பாதுகாத்து தக்க தருணத்தில் வெளியிட்டார். இவ்வழக்குமூலம் ஜி.ஜி. பெரும் புகழ் பெற்றார்.

(தொடரும்)

---

கலையுலகத் தொடர்புகள்—17

# மலைநாட்டு 'லட்சுமி' தெரிவில் எம். ஜி. ஆர்!

எம். ஜி. ஆர் இலங்கைக்கு வந்தது, மலைநாட்டு 'லட்சுமி' தெரிவில் கலந்து கொண்டு மலைநாட்டு 'லட்சுமிக்கு' பரிசு வழங்குவதற்காகவுமே. இந்த ஏற்பாட்டை செய்திருந்த நிறுவனம் வாரக் கணக்காக மலைநாட்டுக்குச் சென்று தோட்டங்களில் அழகிகளை தெரிவுசெய்து, ஒரு குறிப்பிட்ட சிலரை மட்டுமே நுவரெலியாவில் நடைபெறும் மலைநாட்டு 'லட்சுமி' போட்டிக்கு அழைத்திருந்தார்கள். இவர்களில் ஒருவரைத்தான் மலைநாட்டு லட்சுமியாகதெரிவு செய்வதாக இருந்தது.

நுவரெலியாவில் நடைபெறும் இந்த வைபவத்தில் கலந்துகொள்ள நாங்கள் எல்லோரும் அன்றையதினம் காலையில் புறப்பட்டோம். வழமைபோல எம். ஜி. ஆர். தனது நண்பரின் காரில் பிரயாணம் செய்தார். சரோஜாதேவி அவருடைய தாயார் என் மனைவி மற்றொருகாரிலும் மற்றும் வீரப்பன் எம். ஜி. ஆருடைய உதவியாளர் ஆகியோர் இன்னமொரு காரிலும் பத்திரிகை நிறுவனத்தினர் சிலர் தங்களது காரிலுமாக புறப்பட்டு முதலில் கேகாலையில் காலை ஆகாரத்திற்காக நிறுத்தினோம். கேகாலையில் காலை ஆகாரம் முடிவடைந்ததும் (காலை ஆகாரம் எம்.ஜி.ஆரின் நண்பர் விசேஷமாக செய்து தனது காரில் கொண்டுவந்திருந்தார்) மீண்டும் நுவரெலிய பயணத்தை ஆரம்பித்தோம்.

## டயர் வெடித்தது!

எங்கள் காருக்குப் பின்னல் ஒரு ஆஸ்டின் கார் நான் கூறிய விசேஷ பொலிஸ் உத்தியோகஸ்தர்களோடு வந்து கொண்டே இருந்தது. நுவரெலியாவை அணுகிக்கொண்டிருக்கும் சமயத்தில் எம். ஜி. ஆர். பிரயாணம் செய்து கொண்டிருந்த காரின் டயர் வெடித்து விட்டது. இனி டயர் மாற்றி அதே காரில் போவதானால் நேரமாகும்.

"நண்பரே நீங்கள் டயரை மாற்றிக்கொண்டு வாருங்கள் நாங்கள் முன்னுக்கு போகிறோம்" என்றுகூறிக்கொண்டே எங்களது பொலிஸ் நண்பர்களின் காரில் ஏறிக்கொண்டார். எம். ஜி. ஆர். கார் புறப்பட்டு நுவரேலியாவில் குழுமியிருந்த ரசிகப் பெருமக்களுக்கு ஊடாகப் போய்க் கொண்டிருந்தது எல்லோரும் எம். ஜி. ஆர், பெரிய காரில் வருவார் என்று எதிர் பார்த்திருந்த படியால் நாங்கள் சென்ற ஆஸ்டின் ஏ 40 காரை திரும்பிக்கூட பார்க்கவில்லை. இது ஒருவிதத்தில் எங்கள் பயணம் தடைப்படாமல் செல்ல உதவியாகவிருந்தது. எம். ஜி. ஆர். எதற்கும் முன் ஜாக்கிரதையாக தலைக்கு மொட்டாக்குப் போட்டிருந்தார். ரசிகர்கள் தன்பக்கம் திரும்பிக்கூட பார்க்காமல் வேறு காரை எதிர்பார்த்து நிற்பதைக் காண அவருக்கே சிரிப்பாக இருந்தது. சில சமயங்களில் ரசிகர்கள் இப்படியும் ஏமாந்துவிடுகிறார்கள் என்று சொல்லிக்கொண்டே வந்தார் எம்.ஜி.ஆர். நாங்கள் தங்கும் ஹோட்டலில் போயிறங்கியதும் அங்கு குழுமியிருந்தவர்கள் எங்களை அந்தக் காரில் எதிர்பார்க்காததால் அவர்களும் வேறு காரைத் தான் எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள். பின்பு நான் போய்க் கூப்பிட்டதும் தான் ஓடிவந்து எம். ஜி. ஆரை வரவேற்று ஹோட்டலுக்குள் அழைத்துச் சென்றார்கள்.

இதற்கிடையில் சரோஜாதேவி குழு வந்துசேர்ந்து தங்கள் தங்கள் அறைகளுக்குப் போய்விட்டார்கள். மலைநாட்டு 'லட்சுமி' போட்டி நண்பகலுக்கென ஒழுங்குசெய்திருந்தார்கள். நாங்கள் நுவரெலியா போய்ச்சேரும் பொழுது பகல் 11-00 மணி. ஒரு மணி நேரத்தில் புறப்பட்டு நேராக நுவரேலியா குதிரைப்பந்தய மைதானத்திற்குச் சென்றோம். அங்கு ரசிகர்களின் எண்ணிக்கை சொல்லிலடங்காது.

**எஸ். பி. மயில்வாகனன்**



## ஏழை பங்காளர் எம். ஜி. ஆர்.

தோட்டத் தொழிலாளர் அனைவருமே திரண்டு வந்திருந்தார்கள். 'மலைநாட்டு லட்சுமி' தெரிவு நடைபெற முன்பு எங்கிருந்தோ ஒரு நொண்டி மனிதர் முண்டியடித்துக் கொண்டு வந்து எம். ஜி. ஆர். முன் விழுந்தார். ஏழை பங்காளன் எம். ஜி. ஆருக்கு இப்படியான ஒரு சம்பவம் போதுமே! உடனே குனிந்து அந்த நொண்டி மனிதரை தூக்கினார் தழுவி அணைத்துக் கொண்டார். இதைப்பார்த்த அத்தனை ஆயிரம் ரசிகர்களும் கைதட்டி ஆரவாரம்செய்தார்கள். அவர்கள் ஆரவாரம் மகிழ்ச்சி குன்றுவதற்கு முன் எம். ஜி. ஆர். யாரிடமோ ஐந்நூறு ரூபாவை வாங்கி எல்லோருக்

[9ம் பக்கம் பார்க்க]

---

தமிழ் வளர்த்த கிறிஸ்தவர்—9

# யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பேர்சிவல் ஐயர்!

இன்று தமிழன் தன் பழமையைப் போற்றினல், பெருமையைப் பாடினல், தமிழனென்று சொல்லித் தலைநிமிர்ந்து நின்றல் அது கால்ட்வெல் ஐயர் செய்த ஆராய்ச்சியின் பெறுபேறே என்பது முற்றிலும் உண்மை. தமிழனைப் பிறந்தவன், தனித்தமிழைப் பேசவும் எழுதவும் வேண்டும் என அன்றே வாதாடியவர் கால்ட்வெல்ஐயரே. ஐரோப்பியரான அவருக்கிருந்த தமிழபிமானம் இன்று தமிழனுக்கே இல்லாமற்போனது எத்துணை கேவலம். தமிழையே படித்து தமிழையே ஆராய்ந்து தமிழையே சுவாசித்த அவர், தமிழ் நாட்டிலே வசித்து, தமிழுக்கே தொண்டு செய்து தமிழ் நாட்டிலேயே மரிக்கவும் ஆசைப்பட்டார். அவ்வாறே தமதுஎண் பத்தேழாம் வயதில் மதுரையிலுள்ள கொடைக்கானலில் இவர் மரித்தார். இவரது சடலமும் தமிழ் மண்ணுக்கே உரியதாக ... என்ற இடத்தில் நல்லடக்கம்செய்யப்பட்டது. ... வளர்த்த நல்லப்பர்களுள் இவரும் தனி சிறந்தவரே.

பின்னர் ... பேர்சிவல் ஐயர் யாழ்ப்பாணத்திலே தமது தமிழைக் கற்றார். அங்கேயே தமது ஊழியத்தையும் ஆரம்பித்தார். மெதடிஸ்த திருச்சபையிலே ஊழியராக வந்த பேர்சிவல் ஐயர், கல்வித் துறையில் அதிக பாண்டித்தியம் பெற்றவராயிருந்தார். யாழ்ப்பாணத்திலே ஆண் பெண் இருபாலாருக்கும் அநேக கல்வி நிலையங்களை நிறுவியவர் இவரே. யாழ்ப்பாண மத்திய கல்லூரி (Jaffna Central College) என அழைக்கப்படும் பெரும் கல்லூரியை அமைத்தவர் பேர்சிவல் ஐயரே. இவருடைய தலைமையின் கீழேயே ஆறுமுகநாவலர் தமிழ்ப் பண்டிதராய் மத்திய கல்லூரியிற் கடமையாற்றினர். ஐயரும் நாவலரும் சேர்ந்தே கிறிஸ்தவ வேதத்தின் தமிழாக்கம் ஒன்றை உருவாக்கினர்.

தமிழிலே மிகுந்த பாண்டித்தியம் பெற்ற பேர்சிவில், ஆங்கில-தமிழ் அகராதி ஒன்றை ஆக்கினர். தமிழிலே அன்று வழங்கிய பழமொழிகளுள் 1873 பழமொழிகளைத் தெரிந்து அவற்றை அச்சிட்டு வெளியிட்டார். அவற்றுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பும் அமைத்துக் கொடுத்தார்.

இதைவிட 'தினவர்த்தமாணி' என்ற ஒரு சிறந்த தமிழ்ப் பத்திரிகையை ஆரம்பித்து அதனைச் சிறப்புற நடத்தியவரும் இவரே.

1843-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ந் திகதி இவர் எழுதிய கடிதம் ஒன்றிலே தமிழன் பெருமை குறித்து இவர் கொண்டிருந்த அபிப்பிராயம் வெகு தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

"அடக்கமும் அழகும் வல்லமையும் கொண்ட ஒரு மொழி தமிழேயாம். தத்துவ விளக்கத்திலும் இலக்கிய அழகிலும் வடமொழியையே தாண்டிய மொழி தமிழேயாம். தமிழ் மக்களின் அறிவுத்திறமை மெச்சத்தக்கது. அவர்களது இயற்கையான திறமைக்கும் ஆற்றலுக்கும் தக்கதாகவே அவர்கள் மொழியும் திறமை படைத்ததாயிருக்கிறது. ஆகவே ஆங்கில மொழிக் கூடாக அவர்கட்கு அறிவுபுகட்டுவதிலும் பார்க்க, அவரது அரியமொழியான தமிழ் மூலமாகக் கல்வி புகட்டுவதே சாலச் சிறந்ததாகும்" எனப் பேர்சிவல் ஐயர் கூறினர். அத்துணையாகத் தமிழை ஆராய்ந்து கற்று அதன் பெருமையை நிலைநாட்டியவர் பேர்சிவல் அவர்களே. தாய்மொழி மூலம் கல்வி கற்பதே தகுதியும்முறையுமானதென்று அன்று கூறியவர் பேர்சிவல் ஐயரே. அதுவும் தனிப்பெருந் தமிழைத் தாய்மொழியாய்க் கொண்டு அதன் மூலம் கல்வி கற்கக் கிடைப்பது பெரும் பாக்கியம் எனக் கருதியவர் அவரே.

யாழ்ப்பாண மத்திய கல்லூரியை நிறுவி, சிறந்த நிர்வாகியாகவும் தமிழ்த்தொண்டராயும் வாழ்ந்த பேர்சிவல் ஐயர் புகழ் இன்றும் யாழ்ப்பாணம் எங்கும் பெரிதும் போற்றப்படுவதைக் காண்கிறோம். யாழ்ப்பாணம் மெதடிஸ் ஆலயத்தின் பின்புறத்தில் இருக்கும் மண்டபம் 'பேர்சிவல் மண்டபம்' என அழைக்கப்பட்டுவருகிறது.

**வண. எம். ஏ. இரத்தினராஜா**

# வசந்தம் வந்தது

பஸ் ஹாரன் ஒலித்தது. சமையல் அறையிலிருந்த ராதா 'டிபன் பாக்ஸை' எடுத்துக் கொண்டு கூடத்துக்கு வருவதற்குள் ஸ்கூல் பஸ் புறப்பட்டுப் போய்விட்டது.

குழந்தை அஞ்சுவின் பஸ்ஸுக்கு அப்படி என்னதான் அவசரமோ? சேகரின் 'டிபன் பாக்ஸி'லுள்ள இட்டலிக்கு மிளகாய்ப் பொடி தடவிக் கொண்டிருந்தவள் பஸ் வரும் சத்தம்கேட்டதும் அஞ்சுவின் உணவைக் கையில் எடுத்தாள். ஒரு நிமிஷம் கண்ணை இருட்டிக்கொண்டு மயக்கமாய் வந்தது. தன்னை சுதாகரித்துக் கொண்டு கூடத்துக்கு வருவதற்குள் பஸ் போய்விட்டது.

சேகர் கண்டால் ஏச்சுக்களையும், பேச்சுகளையும் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டுமே. என்ன செய்வது? என்று எண்ணிய வண்ணம் மனதில் திகிலுடன் திரும்பியவளுக்குச் சப்த நாடிகளும் ஒடுங்கி விட்டன. கூடத்தில் இருந்த சேகர் அவளை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளுடைய மென்மையான உடல் மெல்ல நடுங்கிக்கொண்டிருந்தது.

"ஏண்டி அறிவிருக்கா? குழந்தை இன்று முழுவதும் பட்டினிகிடக்கப் போகிறளே. சமையலறையில் முட்டையா இட்டுக்கிட்டிருந்தாய்? சாப்பாடு கொடுக்காமலே என் குழந்தையைக் கொன்றுவிடு" என்று ஆத்திரத்துடன் படபடத்தான்.

"பஸ் வந்து"— மென்று விழுங்கினள் அவள். எவ்வளவு சமாதானம் சொன்னலும் அவன் காதில் ஏறாது. ருத்திர மூர்த்தியாய் அல்லவா அவன் நின்றுகொண்டிருக்கிறன்.

தலையைக் குனிந்து கொண்டிருந்த அவள் நீர் நிறைந்த கண்களுடன் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டுப் பேசாமல் உள்ளே சென்றுவிட்டாள்.

சேகரின் முதல் மனைவி செல்லம் ஐந்து வருடங்களுக்கு முன் அஞ்சுவைப் பெற்றுவிட்டுக் கண்ணை மூடிவிட்டாள். நான்குவயதுக் குழந்தையான அஞ்சுவை வைத்துக்கொண்டு அவன் மிகவும் கஷ்டப்பட்டான். முப்பது வயது நிரம்பிய அழகனும் இளைஞனுமான சேகருக்கு எவ்வளவோ பேர் பெண்கொடுக்க முன்வந்தார்கள். அவன்தான் எல்லாவற்றையும் தட்டிக்கழித்துவிட்டான். பெரிய கம்பெனியொன்றில் மானேஜராகக் கடமை ஆற்றிக்கொண்டிருந்த சேகர் 'வேலையைப் பார்ப்பதா? குழந்தையைப் பார்ப்பதா?' என்று இரண்டுங்கெட்டான் நிலையில் தவித்துக்கொண்டிருந்தான். சேகரின் நிலையைக் கண்ட அவனுடைய நண்பர்கள்தான் அவனை எவ்வளவோ முயற்சிகளுக்குப்பின் இரண்டாந் திருமணத்துக்கு இசைய வைத்தார்கள். ஒரு வறிய குடும்பத்தில் பிறந்த அழகும் குணமும் நிரம்பிய ராதாவையே சேகருக்கேற்ற பெண்ணுகத் தேர்ந்தெடுத்தார்கள். திருமணமும் நடைபெற்றது. 'இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்படும் பெண்களெல்லாரும் கொடுமையானவர்கள்' என்ற எண்ணமே சேகரின் கொள்கையாகும். அதனல்தான் ராதாவின்மேல் அன்பு காட்டாமல் கோபமும், வெறுப்புமாக இருந்தான். குழந்தையை வளர்ப்பதற்காகவே ராதாவைத் திருமணம் செய்த சேகர் தன் உணர்ச்சிகளுக்குத் தடைபோட்டிருந்தான்.

கடிகாரம் ஒன்பது முறை அடித்து ஓய்ந்தது. கணவனின் ஆபீஸுக்கு நேரமாவதை உணர்ந்த ராதா 'டிபன் பாக்ஸை' எடுத்துக்கொண்டு சேகரிடம் வந்தாள். அவளைக் கண்ட சேகர் வெறுப்புடன் முகத்தைச் சுளித்தவாறே "குழந்தை பட்டினி கிடக்கும் போது எனக்குமட்டும் சாப்பாடு தருகிருயா? எனக்கு வேண்டாம். நீயே எல்லாத்தையும் கொட்டிக்கொள்" என்று கோபத்துடன் பொரிந்தவாறே ஆபீஸுக்குச் சென்றுவிட்டான். துக்கம் தொண்டையை அடைக்கக் கண்ணீருடன் படுக்கையில் விழுந்த ராதா தன் தலைவிதியை எண்ணிக் கதறினள்.

தன் எதிர்கால வாழ்வைப் பற்றிக் கற்பனைக் கோட்டையைக் கட்டியிருந்த ராதா, அதில் ஒன்று கூட கணவனிடம் இருந்து கிடைக்காததையிட்டு மிகவும் மனம் வருந்தினள்.

பகல் முழுவதும் ஓய்வு, ஒழிச்சல் இல்லாமல் வேலைகளைச் செய்துவிட்டு இரவில் சுருண்டு படுத்து விடுவாள். கூடத்துக்கு அருகில் இருக்கும் அறையில் படுத்திருக்கும் சேகர், கூடத்தில் ராதாவுடன் படுத்திருக்கும் அஞ்சுவின் போர்வை சற்றே விலகியிருந்தாலும் பொறுக்கமாட்டான். ஒருநாளாவது அவளைப்பற்றிக் குறை கூறுவிட்டால் அவனுக்குப் பொழுதே விடியாதது போலிருக்கும்.

ஆபீஸுக்கு வந்த சேகருக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. வேலையில் மனமே செல்லவில்லை.

'குழந்தை பட்டினியாகக் கிடக்கிறளே' என்ற எண்ணமே அவனை வாட்டி வதைத்தது.

ஆபீஸுக்கு அரைநாள் லீவு எழுதிக் கொடுத்துவிட்டு டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு அஞ்சுவின் 'கான்வென்டி'ற்குச் சென்றான்.

முன்னறையில் இருந்த பிரின்ஸிபால் அஞ்சுவைக் கூப்பிடச்சொல்லி ஆளை அனுப்பிவிட்டு, சேகரைப் பார்த்து "மிஸ்டர் சேகர், உங்கள் குழந்தை நல்ல கெட்டிக்காரி. ஸீ இஸ் ஏ குட் கேர்ள் ( She is a good girl ) போன வருஷம், அதற்கு முந்தின வருஷம் கூட அஞ்சு படிப்பில் பின்தங்கியிருந்தாள். இந்த வருஷம் வகுப்பில் முதலாவதாக இருக்கிறள். உங்கள் மனைவி ராதா இங்கு அடிக்கடி வந்து அஞ்சுவைப் பற்றி விசாரித்துச் செல்கிறர். குழந்தை படிப்பில் முதலாவதாக வருவதற்கும், சுத்தமாக இருப்பதற்கும் உங்கள் மனைவியின் திறமையே காரணம். குழந்தையை நன்றாகக் கவனிக்கிறர். யு ஆர் வெரி லக்கி மேன் ( Your are very lucky man ) என்று மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் கூறினர்.

சேகர் வியப்பு மேலிடப் பிரின்ஸிபாலையே பார்த்துக் கொண்டிருந்தான். இவ்வளவு நேரமும் அங்கு நின்றுகொண்டிருந்த அஞ்சு "சித்தி ரொம்ப நல்ல சித்தி அப்பா. நீதான் சித்தியை வீணைக் கோச்சுக்கிருயே. நீதான் கெட்ட அப்பா" குழந்தை தன் மனதை திறந்து காட்டிவிட்டாள்.

செல்லம்கூட குழந்தையை ஒழுங்காகக் கவனிக்கிறதில்லை. ராதா பெற்ற தாயைவிட ஒரு படி மேலேயே சென்று விட்டாள். அஞ்சுவை வகுப்புக்குச் செல்லும்படி கூறிவிட்டு, பிரின்ஸிபாலிடம் விடைபெற்றுக் கொண்டான்.

வெளியில் காத்திருந்த டாக்ஸியில் ஏறிய அவன் டாக்ஸியை வீட்டுக்கு விடும்படி கூறினன். என்றுமில்லாதவாறு அவன் மனம் சந்தோஷத்தினுல் நிறைந்திருந்தது.

டாக்ஸிசெல்லும் வேகத்தை விட அவன் மனம் வேகமாக வீட்டுக்குச் சென்று ராதாவைச் சுற்றியே வட்டமிட்டது. இனிமேல் ராதாவின் வாழ்க்கையில் என்ன குறை?

**மீனுகுமாரி இராமநாதன்**

---

இப்படித்தான் இந்தியா சென்றேன்:

# அன்னை வேளாங்கண்ணி; தர்க்கா மசூதி தரிசனம்

நாகபட்டினம் அன்னை வேளாங்கண்ணியின் புதுமைகள் பற்றி 'ஈழநாடு' -நண்பர் தேவா அடிக்கடி பேசிக்கொள்வார். இந்த ஆலயத்தில் அவர் வைத்திருந்த நம்பிக்கை எம்மை இங்கு செல்லத்தூண்டியது.

அன்னை வேளாங்கண்ணி மாதாகோவில் எமது சைவ ஆலயங்களைப்போல பிரமாண்டமான கட்டிடங்களைக் கொண்டிருக்கவில்லையாலும், அந்தப்பூமியில் தெய்வீக மிளிர்ந்தது. இந்துசமுத்திரம் ஆலய முகப்பில் முட்டிமோதுவது இயற்கையாகவே புனிதத் தன்மையை மேலோங்கச்செய்தது.

இங்கு எழுந்தருளியுள்ள மாதா தனனிடம் 'பழி' கிடப்போருக்கு அருள்புரிந்து இன்னல் தீர்க்கும் பெருமை உடையவர் என்ற நம்பிக்கை நிலவுகிறது. இதனல் சமய வேறுபாடுகளை மறந்து பல்வேறு மதத்தினரும் இங்கு கூடுகின்றனர். அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால், அதிகாலையிலிருந்தே ஜனத்திரள் அதிகமாக இருந்தது. விடுதி ஒன்றில் தங்கியிருந்த நாமும் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிப் பூசையில் கலந்துகொண்டோம்.

இங்கு ஒரு 'மியூசியம்' இருக்கிறது. மாதாவிடம் நேர்த்தி வைத்து நிறைவுபெற்ற அடியார்கள் காணிக்கையாக வழங்கிய தங்கம், வெள்ளி, பொன் போன்ற பெறுமதி வாய்ந்த பெருந்தொகைப் பொருட்கள் கண்ணுடி அலுமாரிகளில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

நோயினல் குணமடையாதவர்கள், பிரிந்திருந்த கணவனை மீண்டும் பெற்றவர்கள், நீண்டகாலத்தின்பின் மகப்பேறு பெற்றவர்கள், கொடியநோயினல் அவஸ்தைப்பட்டு விடுபட்டவர்கள், பயங்கரவிபத்திலிருந்து தப்பியவர்கள் போன்றோர் தமக்கு ஏற்பட்ட 'விடுதலைகள்' பற்றி அதில் விளக்கியிருந்தனர். இவற்றை வாசித்தபோது உடல் சிலிர்த்தது!

நாமும் இந்த அற்புத மாதாவிடம் நேர்த்தி ஒன்று வைத்தோம். நீண்டகாலம் மகப்பேறு இன்றி மனம்வருந்தும் நமது ஒரு நண்பர் குடும்பத்தினருக்கு மகப்பேறு வேண்டினேம். தங்கத்தால் தொட்டில் அமைத்துக்கொண்டு அவர்களுடன் பறந்து வருவதாக நேர்த்தி!

## சாயிபாபா தரிசனம்

நண்பகல் 11 மணிவரை மாதா கோவிலில் செலவிட்டோம். நவாலி மகாவித்தியாலய அதிபர் திருமதி ஆறுமுகராசாவும் நண்பர்களான திருமதி பஞ்சாட்சரமும், மகள் பபியும் நாகபட்டினத்திலிருந்து எம்மை விட்டுப்பிரிந்தனர். திருமதி ஆறுமுகராசா நேரே சென்னை சென்றர். திருமதி பஞ்சாட்சரமும் அவரது மகளும் சாயிபாபாவைத் தரிசிக்கும் பொருட்டு பங்களூர் ஊடாக புட்டபர்த்தி புறப்பட்டனர்.

நானும் மனைவியும், நண்பர் சிவாவும் நாகூரிலுள்ள தர்க்கா மசூதிக்குச் செல்ல முடிவு செய்தோம். தமிழ்நாட்டில் மிகப் பிரபல்யமான மசூதிகளில் ஒன்று இது. நாகபட்டினத்திலிருந்து நாகூருக்கு பஸ்ஸுக்கு 50 காசு—சுமார் 45 நிமிடநேரப் பயணம்!

## வானுயர்ந்து நிற்கும் தர்க்கா மசூதி

இதுவரை இதுபோன்ற மசூதியை நான் பார்த்ததில்லை. நல்ல சூழலில் வானுயர்ந்த கட்டிடங்களைக்கொண்டுள்ளது. எந்நேரத்திலும் அடியார்கள் நடமாட்டம் இருந்தது. அப்போது நேரம் பகல் 12 மணி – பயபக்தியுடன் தொழுகையில் மக்கள் ஈடுபட்டிருந்தனர்.

மசூதிக்கு அழைத்துச் சென்ற 'வழிகாட்டி' தளதளவென்றுபளபளக்கும்மேனியையுடைய மூன்று பெரியவர்கள் முன் எம்மை அமர்வித்தார்.

**எஸ். கே. காசி**

நாகூர் சென்றடைந்ததும் ஒரு வாலிப அன்பர் எம்மை அணுகி மசூதிக்குக் கூட்டிச் சென்றர். அழையா விருந்தாளிகளான இவரைப்போன்ற 'வழிகாட்டிகள்' எமக்குப் புதியவர்கள் அல்ல. ஸ்தல யாத்திரைகளை மேற்கொண்டு தமிழ்நாட்டுக்குவரும் பிறநாட்டவர்களுக்கு 'மாயாஜால வித்தை' காட்டும் கும்பல் அங்கு பல இடங்களிலும் பெருமளவில் இருக்கிறது. இவ்வித 'வழிகாட்டி'கள் பழனி முருகன் சந்நிதியில் நடத்தும் 'கூத்துக்களை' பற்றி பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறுகின்றேன்.

நாகூர் 'வழிகாட்டி' எம்மைக் கூட்டிச்சென்று கடை ஒன்றில் அறிமுகம்செய்தார். இன்முகத்துடன் வரவேற்ற அந்த 'வியாபாரி' தனது தொழிலை உடனடியாகவே எம்மிடம் ஆரம்பித்தார். நம் மூவரிடமும் தலா மூன்று அர்ச்சனைப்பெட்டிகளைத் தந்தார். கைநீட்டி வாங்கிவிட்டோம்! 29 ரூபா 25 சதம் கணக்குச் சொன்னர். தூக்கிவாரிப்போட்டது!

எந்த ஆலயத்திலும் இவ்வளவு பணத்தை நாம் செலவு செய்ததில்லை. இங்கிருந்து இந்தியா செல்பவர்கள் 'அதிக பணத்தை செலவிடமுடியாது. அங்கு காசுக்கு நல்ல மதிப்பு-பெறுமதி அதிகம்!

அந்தப்பெட்டிகளை கட்டாயம் வாங்கும்படி வற்புறுத்தினர்கள். நண்பர் சிவா அவற்றை வாங்கித் தொலைப்போம் என்பதுமாதிரி 'நசிவதை' உணர்ந்தேன். என்னல் இதனைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. மசூதியின் பரிபாலனத்துக்கு இத்தொகையைக்கொடுக்கலாமே – வியாபாரிகளுக்கு ஏன் தாரைவார்க்கவேண்டும் என்ற எண்ணம் எனக்கு! கடைசியில் ஒரு (3 பெட்டிகளைக்கொண்டது) அர்ச்சனையை 9 ரூபா 75 காசு கொடுத்து வாங்கினேம். அதாவது இலங்கைக் காசின் பெறுமதி சுமார் 29 ரூபா!

அவர்களும் சப்பாணி கட்டியபடி கீழேஉட்கார்ந்திருந்தனர். எமது பெயர் விபரங்களை அங்குள்ள கொப்பி ஒன்றில்பதிந்து கொண்டார்.

'கனித்தா ஒருமித்தா ஆசிர்வாதம்' என்று கேட்டார். 'மூவரும் ஒன்றுதான்' என்றர் சிவா.

அவர்கள் வைத்திருந்த கொப்பியில் என். ரீ. சிவலிங்கம் சிலோன் 100 ரூபா என்று எழுதி அதில் கையொப்பமிடுமாறு எம்மிடம் நீட்டப்பட்டது.

அதிலிருந்த வாசகத்தை நேரம் ஒரு மணி (1-00) என்று நண்பர்சிவா நினைத்துவிட்டார் போலும். இது என்ன என்றர். தட்சணை என்றர்கள். வழமையான அடக்கத்துடன் சிவா எதுவுமே பேசவில்லை- வாய்திறக்கவேயில்லை.

நான் கதைத்தேன். "சாமி நாம் இலங்கையிலிருந்து வந்துள்ளோம். எமது நாடு இங்கு பணம் கொண்டுவர அனுமதிப்பதில்லை. சரித்திரப் புகழ் பெற்ற இந்த மசூதியை 'தரிசிக்கும்' நோக்கத்துடனேயே இங்கு வந்தோம், எம்மைக் கட்டாயப்படுத்தாதீர்கள்' என்றேன்.

அவர்கள் எம்மை விட்டபாடில்லை. 100 ரூபாவில் ஆரம்பித்து 25 ரூபாவரை பேரம் பேசப்பட்டது. சிவா 15 ரூபா கொடுக்கத்தயார்!

என்னல் தொடர்ந்தும்அங்கு இருக்கமுடியவில்லை. எழுந்துவிட்டேன். அமருங்கள் என்று கேட்டனர். ரூபா 5 கொடுத்து அந்த இடத்திலிருந்து விடுபட்டோம்.

தொடர்ந்து மசூதியின் பிரதான வாயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். இங்கும் சிவாதான் முன்னே நிற்கிருர். முன்னர் இந்தியா சென்று திரும்பிய அனுபவசாலி அல்லவா?

தலையைக் குனியும்படி கேட்கப்பட்டு, மயில் இறகுகளால்

(9-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட், போன்: 7199.

யாழ்ப்பாணம். தந்தி: வைரம்

# புதுமை என்ற பெயரில் கேலிக்கூத்து ஏன்?

நாகரிகமும் விஞ்ஞானமும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ச்சியுற்றுவரும் இவ்வேளையில் நமது பாரம்பரியமான பண்பாடுகளும், கலாச்சாரங்களும் காலத்தோடு ஒட்டி சிறிது சிறிதாக மாறிக்கொண்டு வருகின்றன. காலம் மாறும்போது, நாமும் கொஞ்சம் மாறுவதில் தவறு இல்லை. ஆனல் அம்மாற்றம் நமது மரபோடமைந்த வாழ்க்கை முறைகளை தர்மங்களை கெடுப்பவையாக இருப்பின், அம்மாற்றமே எமக்கு வேண்டாம்.

புதுமை, புரட்சி என்ற போர்வையில் அர்த்தமற்ற வெறும் கேலிக்கூத்துக்கள் இன்று சமூகத்தில் பரவிவருவது வெட்கப்பட்டு, வேதனைப்பட்டு உள்ளம் குமுற வேண்டிய விடயமேயாகும்.

## இளம் தலைமுறையின் போக்கு

நாகரிகம் வளர்ச்சியுற்று வருவதால் தமது வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்துவதாகக் கூறிக்கொண்டு, வாழ்க்கையின் சாதாரண தரத்தையே சீரழிக்க முயன்றுகொண்டிருக்கும், இன்றைய இளம் தலைமுறையினரின் ஏதேச்சையான போக்கை சுட்டிக்காட்டி அவர்களது தவறுகளை நாகரிகமாக நயமாக விளக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டிருக்கிறது.

பெற்றோர்களின் பராமரிப்பில் வளர்ந்துவரும் இளைஞர்களும் யுவதிகளும் திருமணம் எனப்படும் பந்தத்தின் மூலம் ஒரு புதிய பாதையில் அடியெடுத்து வைத்து சுயமாக நடைபோட முற்படும்போது வாழ்க்கையின் அடிப்படை உண்மைகளில் தெளிவில்லாத காரணத்தினுலும், உலக அனுபவங்களில் பரீட்சயம் இன்மையினுலும், எதிர்பாராத பிரச்னைகளை எதிர் நோக்கி தடுமாற்றம் அடைகின்றனர்.

வீட்டின் சிரசு தந்தையென்ருல், வீட்டின் இருதயம் தாயாவாள்.

Father is the head of the house; Mother is the heart of the house;
என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

பெண்ணுனவள், பல விதத்தில் ஆணைவிடச் சிறந்தவள், தன்னலப் பற்றே இல்லாது, பெருமையாக, அன்பாக, தாயாக, தாதியாக, தியாகியாக, கொடையாளியாக, மற்றவர்களுக்காக வருந்துவதற்காக பெண்ணுடன் ஆண் ஒருபோதும் இணையாக இருக்க மாட்டான். பெண்ணின் இதயத்திலிருந்து வெளிப்படும் அன்பும், இப்புவியில் அவளுடைய தொழிலாகிய உற்பத்தியும், ஆணைவிட அவளை எவ்வளவோ உயர்த்திக் காட்டுகிறது.

எவ்வளவோ சிறப்புப் பெற்று, மானிட வாழ்க்கைக்கு சீரெடுத்துக் கொடுக்க வேண்டிய பெண்கள் தவருன பாதையில் சென்று வாழ்க்கையை வீணுக்கி விடுவதோடு, பெண் இனத்தின் பாரம்பரியமான பெருமையையும் பாழாக்கிவிடுகின்றனர்.

ஆவதும் பெண்ணுலே உலகம் அழிவதும் பெண்ணுலே என்பது பழையமொழி.

## வெறும் வேலியல்ல

சுமுகமான இல்வாழ்க்கைக்கு சிறந்த மனைவியே வேண்டப்படுகின்ருள். திருமணம் என்பது மத தர்மத்தைக் காக்கும் வெறும் வேலியல்ல! மதத்தின் அத்திவாரமே மனிதன் தன்னை அடக்கி ஆள்வது தான்! திருமணம் அடக்கத்தைத்தவிர, வேருென்றுமில்லை. கணவன் மனைவியுடைய இதயங்களைச் சுத்தப்படுத்துவதாக இருக்கிறது திருமணம்!

இல்லறத்தைச் செம்மைப்படுத்தும் மேன்மையான பணி பெண்ணைச் சேர்ந்தது.

எளிமையான வாழ்க்கையும், உயர்ந்த எண்ணங்களும் உண்மையிலேயே உன்னத வாழ்க்கையை வழங்குகிறது.

இல்லறத்தை வளமாக்கி, இன்பத் தென்றல் வீசச்செய்யும் அந்த மகத்தான சக்தி பெண்ணிடமே இருக்கிறது.

பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற நிலையின் காரணமாக ஏற்பட்டுவரும் மாறுதல்கள், எங்கே நமது பெண்மைக்கும், அதனேடொத்த மானிடப்பிறவிக்கும் இழுக்குத் தேடிவிடுமோ என்ற அச்சம் அப்பப்போ அச்சுறுத்திக் கொண்டே இருக்கிறது.

> "எந்தப் பெண்ணிடம் அடக்கம், எளிமை, ஒழுங்கு, கடமையுணர்ச்சி இவைகளைக் காணமுடிகிறதோ அப் பெண் ஒருநாளும் தவருன வழிக்குப் போகமாட்டாள்"

பெண்ணே! திருமணம் எனப்படும் புதிய ஓர் இணைப்பின்மூலம் திசை திருப்பப்படும் உனது எண்ணங்களும் நோக்கங்களும் பொறுப்பு மிகுந்தவையாக இருக்கவேண்டும்.

உன்னை மாலையிட்டு, மனையாளாக ஏற்றுக்கொள்ளும் கணவன் வாழ்வில் திருப்தியும் நிறைவும் பெறவேண்டும்!

அவன் வீட்டுக்கு வரும்போது, அன்பாக வரவேற்று, இனிமையாக உபசரித்து, அவன் பசியறிந்து பசிதீர்த்து, அவனது இன்பதுன்பங்களில் பங்கு கொண்டு, அவனைக் கவலையில்லாமற் பேணிக் காப்பாற்றுபவளாக என்றும் இருக்க வேண்டிய பொறுப்பு மனைவிக்கு உண்டு!

பெண்ணே, உனது அன்றுட வாழ்க்கைப் பாதையை விடுத்து, ஒரு புதிய பாதையை வகுத்து, ஒரு புத்தம் புதிய உறவை ஏற்படுத்துவது திருமணம் எனப்படும் ஒரு பந்தமே.

## பெண்களே பெண்மையைப் பேணுவீர்!

ஆணையும் பெண்ணையும் இணைத்து, அதன்மூலம் ஏற்படும் அழியாத பரஸ்பரஅன்பை விதைத்து, அதன் காரணமாக விளையும் இல்லற தர்மத்தை காலம் காலமாக எடுத்துவிளக்குவதே இந்த வாழ்க்கை ஒப்பந்தத்தின் தலையான பணியாக இப்புவியெங்கும் பாரம்பரியமாக பண்டுதொட்டு விரிந்து பரவி வருகிறது!

ஒரு பெண்ணுக்கு கணவனை விட உயர்வாக ஒன்றும் இருக்கக் கூடாது. கணவனுக்கு சமமாகவும் இன்னென்று இருக்கக் கூடாது. தன் பெருமைகளையும், இலட்சியங்களையும் கணவன் என்ற ஒளிக்கு எண்ணெயாகவும், திரியாகவும் மாற்றிவிட்டு, தன்னைத் தானே ஒளிக்குள் அடக்கிக் கொள்பவள் தான் பெண்! பெண்ணே! நீ கோடிமலர் பூத்த வண்ணத் தோட்டமாக இருக்கவேண்டாம். ஒரு சாதாரண குடும்பத்திற்கு ஏற்ற குணவதியாக இருந்தால்மட்டும் போதும்!

வாழ்க்கைப் பாதையானது பூந்தென்றல் வீசும் சோலைவனமாகவோ, மலர்ப் படுக்கையும், சம்பள விரிப்பும் நிறைந்த உல்லாச புரியாகவோ இருக்கமுடியாது. அனல்வீசும் பாலைவனமாகவும், முள்ளும் கல்லும் நிறைந்த காட்டுப்பாதையாகவும் இருக்கும். அதற்காக நீ மனந்தளரக் கூடாது; வாழ்க்கைப் பாதை எவ்வளவுதான் கீழ்த்தரமாக இருப்பினும், இருவரும் ஒருவரை ஒருவர் பிரியாது, இணைந்து இருங்கள். துன்பத்தைக் கண்டு துவளக் கூடாது! இன்னல்களைக்கண்டு ஏங்கக் கூடாது! பிரச்னைகளைக் கண்டு பயந்துவிடக்கூடாது! இருவரும் இணைபிரியாது உறுதியுடன் முன்னேற வேண்டும்!

எந்தப் பெண்ணிடம் அடக்கம், எளிமை, ஒழுங்கு, கடமையுணர்ச்சி இவைகளைக் காணமுடிகிறதோ, அப் பெண் ஒருநாளும் தவருன வழிக்குப் போகமாட்டாள், என்பது ஆன்ருேர் கூற்று! இத்தகைய பெண்களால்தான் இல்லறம் சிறக்கிறது! இனிமைகொஞ்சுகிறது! எனவே உன்னுல் முடிந்தவரை உன்னை சிறந்தவளாக மாற்றிக் கொள்! சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, உனக்கும், உன் கணவனுக்கும் சிறப்பைத் தேடிக் கொள்! கண்ணுடி போட்டு விளக்கின் ஒளியைக் காப்பாற்றுவது அல்ல, எமது இந்து தர்மம்! நிர்வாணமான தீபங்கள் சலனமில்லாமல் எரிகின்றன. ஓர் இந்துப்பெண் தன்னைத்தானே காத்துக்கொள்ள வேண்டும்! கற்பு நெறியில் தன்னையும் காத்துக் கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றித் தகுதியமைந்த புகழையும் காத்து உறுதிதளராமல் வாழ்கின்றவளே பெண்! என்பதனையே.

> "தற்காத்துத் தாற் கொண்டாற் பேணித்தகை சான்ற சொற்காத்துச்சோர்விலாள் பெண்"

என்ற குறள் மூலம் எடுத்துக் கூறியிருக்கிருர் வள்ளுவர்.

காட்கரி என்பவர், மராத்தி மொழியில் 'புண்ணியப் பிரபாவம்' எனப்படும் ஒரு நாடகத்தை எழுதியுள்ளார். இந் நாடகக் கதையில்வரும் வில்லன் ஒரு கணவனையும் மனைவியையும் சிறையில் போட்டு விட்டு, பின் கணவனிடம் சென்று, "உன் மனைவி எனக்கு இணங்க வேண்டும். இல்லையென்ருல் உன் குழந்தையைக் கொன்று விடுவேன்" என்று கூறுகிருன். அதற்கு அக் கணவனே, "நீ கேட்பது அவள் கற்பை, அதில் எனக்கு எவ்வித பங்கும் இல்லை. அந்தப் பெட்டகத்தின் சாவி என்னிடம் இல்லை. அது அவளிடம்தான் இருக்கிறது. நீயே அவளிடம் நேரடியாகக் கேட்கலாம். ஆனல், அவளுடைய கணவன் என்ற முறையில் ஒரே ஒரு அபிப்பிராயம் கூறுகிறேன். அது உன்னுல் நடக்காது என்று பெருமிதத்துடன் கூறுகிருன. எனவே பெண்ணுனவள் தன் கற்புவிடயத்தில் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளவேண்டும் என்பது தெளிவாகத் தெரியவருகிறது.

குடும்பத்தில் சிற்றின்பம் தான் தலையாயதல்ல. அதை விடச் சிறந்த இன்பம் பேரும் புகழுமே! கண்ணகிக்கு கோவலன் பொருத்தமானவனல்ல. ஆனல் கோவலனுக்கு கண்ணகி கிடைக்க முடியாத ஒரு பொக்கிஷம். கண்ணகியின் சிறப்புத்தான் கோவலனும் காப்பியத்தில் இடம்பெற வாய்ப்பளித்திருக்கிறது. எனவே மனைவியால்தான் இல்லறம் என்றும் இயங்குகிறது என்பதை மறந்து விடக்கூடாது.

வெறும் கேவல போகத்திற்கும், வீட்டு வேலைகளைச் செய்வதற்கும் உன்னை ஒருவன் மணக்கின்ருன் என்ருல் அவ் இல்லறம் எள்ளி நகையாடக்கூடியது. சிறந்த அறக் காரியங்கள் செய்யவும், குடும்பத்தின் நல்ல குழந்தைகளுக்கு சிறந்த தாயாகவும் விளங்கவே இல்லறம் வகுக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கை என்னும் பண்ணையிலே, பெண் விதைநெல் போன்றவள். அவளால்தான் சிறந்த விளைச்சலை உண்டு பண்ணமுடியும். ஆனல் அந்த நெல்லே விவஸ்தை கெட்டுப் போனல்...அவ்வளவு தான்!

நல்ல மக்களைப் பெறுவதால் இல்லறம் மணம பெறும்! நிறைவு பெறும்! அந்தநிறைவு தான வாழ்வின் பெரும்பயனுக அமைகிறது.

கற்பு நெறி தவருதவர்களாய், மக்கட்செல்வம் நிறைந்தவர்களாய் கணவர்களுக்கு அடங்கியவர்களாய் ஒழுக்கமுள்ள வாழ்க்கைநடத்தும் பெண்கள்தான் இன்று இந்த நூற்ருண்டிற்கு அவசரமாக தேவைப்படுபவர்கள். ஆனல், இன்ருே பெண் எனப்படும் பேய்களினுல் பண்பட்ட மனத்தினூடு புரையோடும் சிந்தனைகள் தேங்க புழுவெனத் துடிக்கும் பல கணவர்களை சந்திக்கக் கூடியதாகஇருக்கிறது. சிலகணவன்மாரின் உயிரைப்பறிக்க இயமன் தேவை இல்லை. அவர்களது மனைவியரே போதும்!

## அலட்சியம் இன்றி

வாழ்க்கையில் என்றும் சலிப்பில்லாலாமல், அலுத்து அலட்சியம் காண்பியாது அன்றலர்ந்த மலர் போல திகழ வேண்டும். அதிகாரத்தைப் பிரயோகித்து அடக்கி ஆள முற்படுவதால், கசப்பு, சலிப்பு, வெறுப்பு இவைபோன்றவை வளர இடம் உண்டாகிறது. ஆனல் நீ மதிப்பும் பக்தியும் உடையவளாக இரு. அன்பினுல் இணைத்துக்கொள்! அன்பினுல் செய்யமுடியாதது எதுவுமே இல்லை. அன்பினுல் இன்பம் உண்டாகும். இது புதுமையாக இருக்கும். புது அனுபவங்கள் புது மகிழ்ச்சியை தருகின்றன.

பெண்ணே! உருவத்தை விட்டு நிழல் போவதில்லை. அவன் உன்னேடு ஒத்த பந்தமில்லாதவன்தான். ஆனல் உயிர் பந்தம் உள்ளவன்! அவனுல் கிடைக்கிற சுகத்திலே பங்குபெறுவது மட்டும்உனக்கு முக்கியமாக இருக்கக்கூடாது.

**இணுவையூர் பாஸ்கர்**

அவன் துக்கத்தில், துன்பத்தில் வேதனையில், விம்மலில் கண்ணீரில் கவலையில் நீ தவருது பங்குபெற வேண்டும். இதனுல் ஒருவருக்கொருவர் பரிவு உணர்ச்சியை பங்கிட்டுக் கொள்வதோடு மனச்சுமையை துயரச்சுமையை ஓரளவு குறைக்க முடியும்.

வாழ்வின் தொடக்கம், நடுப்பகுதி, இறுதி ஆகிய மூன்று நிலைகளிலும் உங்களுடைய ஒரு மனப்பட்ட ஐக்கியவாழ்வு சாந்தியும், நன்மையும் பெறச் செய்கிறது. குடும்பத்தின் இரு கண்களாக இருவரும் விளங்க வேண்டும்! ஆகவே, விளக்கும் ஒளியும் போல நீ அவனுக்கு என்றும் இருந்து இல்லறம் இனிது விளங்கச்செய்வாய்!

வாழ்க பெண்மை! வளர்க உனது பெருமை!

---

# அரசியல்வாதி சொன்ன குட்டிக்கதை

இன்று அரசியல்மேடைகளாக விருந்தாலும் சரி. சமயப் பிரசங்கங்களாக இருந்தாலும் சரி, பேச்சாளர்கள் குட்டி உதாரணக் கதைகளைக் கூறுவது ஒரு மரபாகிவிட்டது.

இங்கே தந்திருக்கும் இக்குட்டிக்கதை, ஒரு அரசியல் தலைவரால் கூறப்பட்ட கதை. இதை யார் கூறினுர் என்பதை நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள்.

முழங்காலைக் கட்டிக் கொண்டு கோவில் உள் மண்டபத்திலேயே உட்கார்ந்திருக்கிருன் கந்தன். கோவில் வெளி மண்டபத்தில் அன்னதானம் நடக்கிறது. குழம்பு, கறி, பொரியல் எல்லாமே 'கம்' என்று வாசம் மூக்கைத்துளைக்கிறது. கோவிலில் நின்றசனங்கள் 'நீமுந்தி நான் முந்தி' என்று, தலைப்பந்தியில் முதல் வரிசையில் உட்காரத் துடித்துக்கொண்டு இடிபட்டு இடம் பிடிக்கிருர்கள்.

இந்தவரிசையிலே கந்தனின் நண்பன் இராமனும் ஒருவன். இடிபட்டு ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டான். தனக்குப் பக்கத்தில் இருக்கவேண்டிய கந்தனைக்காணவில்லை. கந்தன் எங்கே அவன் கண்கள் துழாவின. அவன் கோவில் உள் மண்டபத்தைவிட்டு அசையவே இல்லை. கந்தனுக்கு ஒரே தொல்லை. பசி, ஆசை பந்தியைவிட்டுக் கிளம்பாதே என்று எச்சரிக்கிறது. நண்பனின் பாசம் ஒருபக்கம் துடிக்கிறது. எழுந்து நண்பனிடம் ஓடினுன்.

கந்தா? உனக்கு என்ன நேர்ந்துவிட்டது? சுகயீனமா? இல்லை அஜீரணமா? இல்லை எழுந்திருக்க முடியாது காலில் வலியா? இல்லை! அல்லது பத்தியமா? இல்லை, இல்லை. அப்படியானுல் நீ ஏன் அன்னதானத்துக்கு வந்து பந்தியில் கலந்துகொள்ளவில்லை?

"முட்டாள், நான் ஏன்டா இடிபட வேண்டும். எனக்கு எல்லாமே கிடைக்கும், அங்கு பரிமாறுபவர் என்னுடைய குஞ்சாச்சி. பரிமாறுபவர் தன் ஆளாயின் இங்கிருந்தால் என்ன அங்கிருந்தால் என்ன?......!

(அனுப்பியவர்:
அருள் வேலழகன்)

# தமிழ் நாவல் நூற்றுண்டு ஆய்வரங்கு

## ஒரு நோக்கு—(3)

### சு. கலாபரமேஸ்வரன்

'தமிழ் நாவல் வளர்ச்சி' ஆய்வரங்கில் திரு. சி. மௌனகுருவின் கட்டுரை 'பிரதேச நாவல்கள்' பற்றியதாக அமைந்திருந்தது. வளர்ந்துவருகின்ற நாவலாய்வு முறைகளில் 'பிரதேச நாவல்' பகுப்பு முறையும் ஒன்று என்றும் 'ஒரு நாவலிற் காணப்படும் பிரத்தியேக மொழி நடை, பழக்க வழக்கங்கள், வாழ்க்கை இயங்குமுறைகள் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு சிலரால் இப் பகுப்பு முறை செய்யப்படுகின்றது என்றும் கூறி, கமலாம்பாள் சரித்திரந்தொட்டு அதிகமான பிரதேச நாவல்கள், அநேகமாக அதுவும் கிராமப்புறத்தை அண்டித் தோன்றியிருக்கின்றன எனத் தொடர்ந்தார். சண்முகசுந்தரம் நீல. பத்மநாதன், சுந்தரராமசாமி, கணேசலிங்கம், டானியல், பெனடிக்ற்பாலன் ஆகியோர் இத்துறையிற் குறிப்பிடத்தக்கவர் எனச் சுட்டி பிரதேச நாவல்களை ஐந்துவகையாகப் பகுக்க முனைந்தார்.

மௌனகுருவின் கட்டுரையைப் பற்றி பார்வையாளர்களிற் பலர் கருத்துரை வழங்கினர். நாவலாசிரியர் பெனடிக்ற்பாலன், நமது நாவல்கள் எப்படியோ ஒவ்வொரு பிரதேசத்தை அடிப்படையாக வைத்தே எழவேண்டுமாகையால் 'பிரதேச நாவல்கள்' என்று பகுப்புத் தேவையற்றது எனக் குறிப்பிட்டதுடன் பிரதேச நாவலாசிரியர் பட்டியலில் தமது பெயர் சேர்க்கப்பட்டமைக்கு எதிர்ப்பும் தெரிவித்தார். (சமகால இலக்கியத்தை விமரிசிக்கும்போது எழுத்தாளருக்கும் விமரிசகருக்குமிடையே ஏற்படக்கூடிய கருத்துமுரண்பாடுகளை இங்கே கண்டுகொள்ள முடிந்தது.) திரு. கே. சண்முகலிங்கமும் 'தமிழிலே முற்றாக இனங்கண்டு கொள்ளத்தக்க பிரதேச நாவல்கள் இல்லை என்றும் தலைப்பு புதுமுயற்சியாக இருந்தபோதுங்கூட பொருத்தமற்ற ஒன்றே' என்று குறிப்பிட்டார். பிரதேச நாவல்களிற் பெரும்பாலன கிராமத்தையே அடிப்படையாகக் கொண்டன என்றால், நகர்ப்புறங்களை திலைக்களமாகக் கொண்ட யதார்த்த நாவல்களை எவ்வாறு வகைப்படுத்துவதென்றும் மேலைமொழிகளிலே வளர்ந்த இலக்கியக் கருத்து வடிவங்களை எடுத்த வாக்கிலே தமிழுக்குப் பிரயோகிக்க முனைவது அபத்தமானது என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

'தலைப்பே மாறுபாட்டை விளைவித்தது' என நுஃமான், ஜெயபாலன, மௌனகுரு ஆகியோர் அமைதிகாண முனைந்தனர். கட்டுரை தொடர்பாக ஏற்பட்ட கருத்துமோதல் வெறும் தலைப்பு மாறுபாட்டு விவகாரம் அல்ல. 'தமிழ் நாவலிற் பிரதேசத்துவப் பாங்கு' எனக் கட்டுரை எழுதுவதற்கும் 'தமிழிற் பிரதேச நாவல்கள்' என ஏறக்குறைய ஒரு புதிய கருத்துருவைப் பல்கலைக் கழக மட்டத்திலான ஆய்வரங்கில் அறிமுகப்படுத்துவதற்குமிடையே பெரிய வேறுபாடு உண்டு. கட்டுரை விடயத்தை தெளிவாக அறிமுகம்செய்யத் தவறியமையாலும், தெளிவான எல்லைக் கோட்டினைத் தமது பகுப்பிற்கு வகுக்கத் தவறியமையாலும் ஆய்வின் மத்திய தானமான கருத்துக்கள் கட்டுரையில் பொதுமைப்படுத்தப்பட்டு விடுகின்றன. ஒரு நாவலாவது 'பிரதேச நாவல்' பகுப்பு நோக்கில் நெருங்கி நின்று ஆயப்பட்டிருக்கலாம்.

தமிழ்நாடு பரமகல்யாணி கல்லூரி ஆங்கில விரிவுரையாளரும், இலக்கிய விமரிசகருமான எஸ். தோதாத்திரி அவர்களின் 'தமிழ் நாவல்களிற் பிறமொழிப்பாதிப்பு, என்ற கட்டுரை விழாவிற் படிப்பிக்கப் பட்டது.

தமிழகத்திலேற்பட்ட மேலைமொழிகளின் தொடர்பும், பிறமொழிகளின் செல்வாக்கும் தமிழ் நாவல் வளர்ச்சிக்கு எவ்வகையில் உந்துசக்திகளாக அமைந்தன என விளக்கிய தோதாத்திரி, ஆரம்பநாவல்களில் முளைவிட்ட யதார்த்த வாதம், மர்மபண்பு ஆகியன ஆங்கிலச் செல்வாக்கால் ஏற்பட்டன என்றும், கல்கியின் வரலாற்று நாவல்களில் வால்டர்ஸ் கொச் டூமாஸ் ஆகியோரின் செல்வாக்கைக்காணலாம் என்றும் கூறினார். பிறமொழி நாவல்கள் தமிழில் மர்ம நாவல், வரலாற்று நாவல்கள் ஆகியவற்றைப்பாதித்த அளவு சமூக நாவல்களைப் பாதித்ததாகக் கொள்ள முடியாதென்றும் ருஷிய நாவல்கள்' தமிழ் நாவலிற் சமூக ஆய்வு நிகழத் தூண்டுகோலாயிற் என்றும் கூறியதுடன் சோஷலிச யதார்த்த வாதம், பிராஸ்டிசம், இருத்தலியற் கோட்பாடு, படிமவாதம், இயல்பு நெறி வாதம், நனவோடைமுறைமுதலாம் இலக்கியக்கோட்பாடுகள் நமது நாவல்களைப் பாதித்த வகை தோதாத்திரி பகுப்பாய்ந்திருந்தார்.

தோதாத்திரியின் கட்டுரை தொடர்பான கலந்துரையாடலில் கல்கியின் வரலாற்று நாவல்களைப் பாதித்த சக்திகள் பற்றியும், மேலைத்தேய இலக்கிய கோட்பாடுகள் தமிழ் நாவல்களைப் பாதித்தமுறை பற்றியும் சண்முகலிங்கம் நுஃமான் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

'தமிழ் நாவலின் அண்மைக் காலப்போக்குகள்' என்ற தலைப்பில் இன்றைய தமிழ் நாவலின் 10 ஆண்டுகாலத்திய பல முனைப்பட்ட போக்கினையும் வளர்ச்சியினையும் ஆய்ந்து தமது கட்டுரையை அளித்தார் பேராசிரியர் க. கைலாசபதி. அகவயப்பட்ட மன வெளி மாந்தரைக்கொண்ட அதீத தனிமனித வாத நாவல்களின் பண்புகளையும், சமுதாய சக்திகளைப் பிரதிபலிக்கின்ற சமூக அரசியற் பார்வைகொண்ட நாவல்களின் தன்மைகளையும் கூறி, முரண்பட்ட இவ்விரு போக்குக்களையும் கொண்ட இன்றைய நாவலின்வடிவ, அபிவிருத்தியையும் அதன் மொத்த வளர்ச்சி பற்றிய சில குறிப்புக்களையும் அளித்திருந்தார் திரு. கைலாசபதி. சமுதாயச்சுற்றுச் சார்புக்குள் இயங்குகின்ற பாத்திரங்களையும் அத் தொடர்பிலான ஒழுக லாற்றுப் பிரச்சினைகளையும் முன்னைய நாவல்கள் சித்தரித்த போது இன்றைய நாவல்கள் பல தனிமனித வாதத்தையும் 'ஒழுக்கம்' என்ற ரீதியில் பாலுறவுப் பிரச்சினைகளையும் சித்தரிப்பதை ஜானகிராமன், ஜெயகாந்தன், இந்திரா பார்த்தசாரதி முதலானோரின் நாவல்கள், பாத்திரங்கள் இவற்றை அடிப்படையாக ஒப்பிட்டு விளக்கினுர். மறுபுறம், அரசியல் சமூக இயக்கப்பாடுகள், அதனடியான சமூக மாற்றம், கால உணர்வு போன்றவற்றை முனைப்பாகப் பிரதிபலிக்கும் நாவல்களின் போக்கையும் விளக்கியிருந்தார்.

நாவலின் போக்குகளை தனியே சுட்டிச்செல்லாது பல்வேறு நாவலாசிரியர்களாற் படைக்கப்பட்ட பாத்திரங்களின் குணும்சங்கள், அவர்களின் கருத்துலகு, சமுதாய நிலைப்பாடு, நாவல்களின் இலக்கியத்தகுதிப்பாடு முதலானவையும் நன்குஆய்வுசெய்யப் பட்டிருந்தன. ஈழத்து நாவலின் முனைப்பான போக்குகளை ஒப்பீட்டுவகையால் சிறிது விரிவாகச் சுட்டியிருக்கலாம்.

### 'ஈழத்து நாவல் ஆய்வரங்கு'

நாவல் ஆய்வரங்கில் இரண்டாம் நாளன்று காலையில் 'ஈழத்து நாவல்' பற்றிய ஆய்வுகள் இடம்பெற்றன. தமிழ் நாவல் வளர்ச்சி பற்றிய ஆய்வுகளில் ஈழத்து நாவல்பற்றிய கணிப்பீடுகள் பொதுவாக இடம்பெறுமை உணரப்பட்டமையினுற் போலும் இந் நிகழ்ச்சி அமைக்கப்பட்டது. எனினும் ஈழத்துத் தமிழ் நாவல்களின் ஆரம்பம், ஈழத்து நாவலின் வளர்ச்சிக்கட்டங்கள், ஈழத்து நாவல்—ஒரு பொது மதிப்பீடு, ஈழத்து, நாவல்களில் மொழி என்ற நான்கு ஆய்வுக்கட்டுரைகளும் (ஓரளவு நான்காவதைவிட) ஏறக்குறைய ஒரே விடயத்தைப் பொதுமதிப்பீட்டு வகையாற் கூறும் கட்டுரைகளாகவேயிருந்தன. திரு. சிவநேசச் செல்வனின் முதலாவது கட்டுரை நாவலின் ஆரம்ப பின்னணியைக் கூறுவதாக அமைந்த போது சித்திரலேகா மௌனகுரு, சி. தில்லைநாதன் ஆகிய இருவரது கட்டுரைகளும் ஆரம்பந் தொட்டு இன்று வரையுள்ள வளர்ச்சிநிலையைச் சுட்டி, சில பொதுக்குறிப்புக்களை மட்டுமே தந்தன. நமது நாவலிலக்கியத்தின் சமகால வளர்ச்சியை முழுமையாக அளாவக்கூடிய வகையில் ஆழமும் அர்த்தமுமுள்ள விடயங்களைப் பதித்து ஆய்வாளருக்கு கொடுத்திருக்கலாம். 'நாவல் ஆய்வரங்கில் ஈழத்து நாவல்களுக்கு அதிக இடங்கொடுக்கப்படவில்லை' என இரசிகமணி கனக. செந்திநாதன்கூட குறிப்பிட்டிருந்தார், 'ஈழத்து நாவல்கள் தமிழ் நாட்டிற்குப் பின்னிற்கின்றன' என்ற குரல் பலமாக ஒலிக்கின்றபோது திட்டமான சமகால விமர்சன முறைகொண்ட ஆய்வரங்குகளின் தேவை உணரப்படுகின்றதல்லவா?

'ஈழத்து தமிழ் நாவல்களின் தோற்றம்' பற்றிய கட்டுரையில் திரு. ஆ. சிவநேசச்செல்வன், ஆங்கிலக் கல்வி, சமய மறுமலர்ச்சி இவற்றுடன் அங்கிலோ - சிலோன் இலக்கிய இயக்கத்தினரின் தாக்கம், நூல் நிலையங்களின் செல்வாக்கு முதலானவையும் நாவலின் தோற்றத்திற்கு வழி வகுத்தன' எனக் குறிப்பிட்டிருந்தார். 'சிறிய இலக்கியப் பாரம்பரியமுள்ள யாழ்ப்பாணத்தில் ஈழத்து,முதல்ஆரம்ப நாவல்கள் ஏன் எழவில்லை?' என சிவநேசச்செல்வன் எழுப்பிய கேள்வி பல வாதப்பிரதிவாதங்களை எழுப்பியது.

கலந்துரையாடலில் யாழ்ப்பாணத்துப் படித்தவரின் சமூக இலக்கிய மதிப்பீட்டு முறையே இதற்குக் காரணமென முல்லைமணிகுறிப்பிட்டார். 'இது வெறும் தற்செயல் நிகழ்ச்சியே' என நித்தியானந்தன் குறிப்பிட்டுப் பேசினுர். 'முழுமையான கருத்தில் முதல் ஈழத்து நாவலாக அமையக்கூடிய வீரசிங்கன் கதையைத் தந்தவர் யாழ்ப்பாணத்தவரே' என சுப்பிரமணியர் பேசினுர், இக்கலந்துரையாடல் வெகு சுவாரஷ்யமாக அமைந்திருந்தது.

திரு. சி. தில்லைநாதன் சுதேச மத, கலாச்சாரப் பேணலின் விளைவாகத் தோன்றிய ஆரம்ப கால நாவல்கள் நீதிமுறைத் தாக்கங்களையும் காவிய மரபின் அச்சங்களையும் கொண்டவையாக் இருந்து படிப்படியாகச் சமூக உணர்வு பெறத் தொடங்கியதை விளக்கும்

(9-ம் பக்கம் பார்க்க)

# யாழ் பூங்காவில் பயங்கரக் கரடி!

—வர்ணம்—

பூங்காவில் பதுங்கியிருக்கும் கரடியை எப்படிப் பிடிப்பது?

இது பொலிசாருக்கு ஏற்பட்ட பெரிய தலையிடி.

அதிகாரிதம்கதிரையிலிருந்து எழுந்து வெளியில் வந்தார். உதவி அதிகாரி ஒருவரைக் கூப்பிட்டார். ஓய்விலிருக்கும் பொலிஸ்கான்ஸ் டபிள் கள் அனைவரையும் உடனடியாக நிலயத்துக்கு வரும்படி கட்டளை அனுப்பும்படி பணித்தார். இருக்கிறவர்கள் அனைவரையும் ஆயுதபாணிகளாகத் தயாராகும்படி உத்தரவிட்டார்.

பின் திரும்பி உள்ளே வந்தார். அங்கே காத்திருந்த மனிதர் 'சேர்...சேர்...,என்று இழுத்தார். 'கொஞ்சம் பொறும் உம்மோடுமினக்கெடுவதற்கு நேரமில்லை'' என்றுகூறிவிட்டு மேசையின் ஒரு லாச்சியைத் திறந்து சுழல் துப்பாக்கியை எடுத்து கால்சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டார்.

அதற்குள் அந்த மனிதர் ''சேர் இது முக்கியமான ஒரு விஷயம் கொஞ்சம் கவனியுங்கள்'' என்ருர்.

''நோ ... நோ ... மிஸ்டர் இப்போ உம்மோடு கதைத்துக்கொண்டிருப்பதற்குஎனக்கு அவகாசமேஇல்லை. உம்முடைய விஷயத்தைப்பற்றிஅப்பொயின்மன்ட் கொடுத்துட்டுப்போம், நான் பிறகு கவனிக்கிறேன்'' என்று கூறிய பொலிஸ் அதிகாரி, அறையிலிருந்து மீண்டும் வெளியில் செல்லப்போனுர்.

''சேர், நான் யார் என்று கூட சொல்லவில்லை... அதற்குள்.''

''என் பொறுமையைச் சோதிக்காதேயும், நீர் யாராயிருந்தால்தான் எனக்கு என்ன!''

''நான் முற்றவெளியில் கூடாரம் அடித்திருக்கும் சர்க்கஸ் கம்பனியின் மனேஜர் சேர்,''

சர்க்கஸ் கம்பனி என்றதும் தான்பொலிஸ் அதிகாரி சற்று தயங்கினுர். குடும்பத்தோடு சென்று 'ஓசி'யில் சர்க்கஸ் பார்த்தது ஞாபகம் வந்தது பொலிஸ் அதிகாரிக்கு. ''ஓகோ ஐ சீ...'' என்றவர், 'பட் யூ சீ... வீ ஆர் வெறி பிஸி நவ்'' என்ருர்.

''ஐ நோ யூ ஒல் ஆர். பிஸி, பட் திஸ் மெட்டர் இஸ் ஈக்குவலி இம்போட்டன்ட்'' என்ருர் சர்க்கஸ்கம்பனி மனேஜர்.

அப்பொழுது யாழ். முற்ற வெளியில் சர்க்கஸ் கம்பனியொன்று 'டேரா' போட்டிருந்தது. அங்கே பல்வேறு மிருகங்களின் சாகஸக் காட்சிகள் இடம்பெற்றுவந்தன. இதனைப் பார்ப்பதற்கு மக்கள் தினமும் ஏராளமாகக் கூடினுர்கள். அந்தச் சர்க்கஸ் கம்பனியின் மனேஜர் தான் இப்போது பொலிஸ் அதிகாரியின் அறைக்குள் நின்றவர்.

வெளியில் விசில்சத்தம் கேட்டது. பொலிஸ் ஜவான்கள் எல்லாம் நீட்டாக உடைதரித்துக்கொண்டு றைபிள் துப்பாக்கிகளை சுமந்துகொண்டு அணிவகுத்துநின்ருர்கள். அவர்களுக்கு கட்டளை பிறப்பிப்பதற்கு முன் சர்க்கஸ் கம்பனி மனேஜரின் புகாரைக் கேட்டுவிடலாம் என்று ஆசனத்தில் அமர்ந்தார் பொலிஸ்அதிகாரி. ''சொல்லுங்கள்'' என்றுகூறியபடி சர்க்கஸ் கம்பனி மனேஜரைப் பார்த்தார்.

''வந்து வந்து'' என்று இழுத்தார் சர்க்கஸ் மனேஜர்.

''வந்தாலும்சரி, போனுலும் சரி, விஷயத்துக்கு வாரும்'' என்று அவசரப்படுத்தினுர் பொலிஸ் அதிகாரி.

''உங்களுக்குத் தெரியும் தானே சேர், எங்கள் கம்பனியிலேயே மிக சாகஸமானவிளையாட்டுக்களைச் செய்வதில் ஒரு மிருகம்தான் பெயர்பெற்றது. அன்றைக்குக்கூட அதன் விளையாட்டுக்களைக் கண்டு நீங்கள் கூடகைகட்டி பாராட்டினீங்கள். அந்தமிருகம் இல்லையென்றால் என் கம்பனியேஎப்பவோ மூடியிருக்கவேண்டும். அந்த மிருகத்தை வைத்துத்தான் கம்பனியிலுள்ளவர்களுக்கு சம்பளமும் கொடுத்து நானும் மற்றவர்களும் வாழ்கிறோம். எத்தனையோ ஊர்களுக்கெல்லாம் சென்றிருக்கிறோம். அங்கெல்லாம் நடக்காத சம்பவம் இந்த யாழ்ப்பாணத்திற்கு வந்த இந்தச்சமயத்திலா நடைபெறவேண்டும், நான் இனி என்னசெய்யமுடியும், கம்பனியைத் திடீரென்று இழுத்து மூடிவிடமுடியுமா?'' இப்படி பேசிக்கொண்டுபோனுர் சர்க்கஸ் கம்பனி மனேஜர்.

''ஓ, மிஸ்டர் உங்களுக்கு எனக்கிருக்கும் அவசரம் தெரியவில்லையே. இப்போ என்ன நடந்தது. அந்த மிருகத்துக்கு என்னவும் நேர்ந்துவிட்டதா—யாரும் மருந்து மாயம் செய்து கொன்றுவிட்டார்களா?'' என்ருர் பொலிஸ் அதிகாரி.

''மருந்து மாயமா? அது எங்கள் கம்பனியில் நடக்குமா? 'பில்லி சூனியம் மந்திரம்' எதுவும் எங்கள்கம்பனியை அண்டமுடியாது, ஏனென்ருல் அப்படி பொருமையில் எவரும் எதுவும் செய்துவிடாமல் தடும்பதற்காகவே இரண்டு மலையாள மந்திரவாதிகளை நான் சம்பளத்துக்கு வைத்திருக்கிறேன்.''

''அதுகிடக்கட்டுக்கும் மிஸ்டர், இப்போஎன்ன நடந்தது. அது என்ன மிருகம்?— அதைச் சொல்லித் தொலையும்.''

''அதுதான் சேர் அந்தக் கறுப்புக்கரடி!''

''ஆ! அந்தக் கரடியா? அட பாவமே, என்ன மாதிரி வித்தைகளெல்லாம் காட்டுகிறது அது! அதற்கு என்ன இப்போது—ஏதும் சுகவீனமா?''

''சுகவீனமா? நடக்குமா எங்கள் கம்பனியில்! மிருகங்களுக்குசுகவீனம் வராமல் பார்ப்பதற்கு மூன்று மிருகவைத்தியர்கள், மனிதர்களுக்கு சுகவீனம்வராமல் பார்க்கஇரண்டு மனித வைத்தியர்கள் இருக்கிருர்கள்—' என்றுபெருமையாகக் கூறினுர் மனேஜர்.

''அட, இப்ப என்ன நடந்ததென்று சொல்லித் தொலையும் மிஸ்டர்.''

''அதைத்தான் சேர் காணவில்லை! நேற்று மாலையில் இரண்டாவது ஆட்டத்துக்குப் பிறகு கூட்டில் அடைத்துவிட்டு போய்விட்டோம், காலையில் பார்த்தால் கூடு திறந்து கிடக்கிறது. எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தாகிவிட்டது. எவரும்கடத்திக்கொண்டு போயிருக்கமுடியாது. அது பொல்லாத கரடி—தானே எங்கும் போயிருக்கலாம். ஏனென்ருல் அதற்குச் சுதந்திரபுத்தி அதிகம். விளையாட்டுத்தனமும் கூட. ஒருமுறை றிங் மாஸ்டரை கரடிக்கூட்டில் போட்டு அடைத்துவிட்டு அது றிங் மாஸ்டர் இடத்தில்போய் அமர்ந்துகொண்டுவிட்டது.''

''அப்போ தப்பி ஓடிவிட்டது என்கிறீர்கள்.''

''ஆமாம் சேர்.''

''அதாவது சர்க்கஸ் கம்பனி கறுப்புக்கரடி தப்பி ஓடிவிட்டது. இதைச் சொல்லுவதற்குத் தான் இத்தனை நேரம் என் உயிரை வாங்கினீராக்கும்'' என்று கூறிய பொலிஸ் அதிகாரியின் மூளை தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது.

(தொடரும்)

## பிரியாவிடை

சுழிபுரம், சனி

சுழிபுரம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் வித்துவான மு.நவரத்தினம் தலைமையில், அராலி இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு.வ. ஆறுமுகராசாவுக்கு பிரியா விடைவைபவம் ஒன்று நடைபெற்றது. ஆசிரியர்கள் திருமதி ப.சிவகுருநாதன், திரு.அ.நடராசா, திரு.இ.நவரத்தினம், திரு.இ.திருநாவுக்கரசு திரு. பொ.சுந்தரமூர்த்தி அகியோர் மாற்றம் பெற்ற அதிபரின் சேவையைப் பாராட்டிப் பேசினர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (அ)


நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினரிசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன், பாரதி
தங்கத் தம்பி

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா
அன்னமிட்டகை


## மறுமலர்ச்சி மன்றம் சாம்பியன்

சுழிபுரம், சனி

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட உதைபந்தாட்டக்கழகங்களுக்கிடையே நடைபெற்ற சுற்றுப்போட்டியில் காலையடி மறுமலர்ச்சி மன்றக்கோஷ்டி இவ்வாண்டுச் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எட்டுக்கழகங்கள் பங்கு கொண்ட இப்போட்டிகள் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் காலையடி மறுமலர்ச்சிமன்றக் கோஷ்டியினருடன் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு மாணவமன்றக்கோஷ்டியினர் மோதிக்கொண்டனர்.

காலையடிக் கோஷ்டியினர் 3-1 கோல்களால் வெற்றிபெற்றனர். வரும் ஏப்ரல்மாதம் 0-ம் திகதி சனிக்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கும் விளையாட்டுப் போட்டியின் போது உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்படும். (உ)


RIO (Jaffna) Daily 4 Shows Form 4-4-77
THE AGE OF GALLANTRY
ACTION COMEDY

றீகல் (யாழ்ப்பாணம்)
முத்துராமன் — நாகேஷ்
ஜெயபாரதி நடித்த
தினசரி 2-30, 6-30, 9-45, மட்டும்
அனுபவி ராஜா அனுபவி
டைரக்ஷன்: கே: பாலசந்தர்

ராஜா (யாழ். நகர்)
எம். ஜி. ஆர்—ஈ. வி. சரோஜா
நம்பியார்-எம். ஆர். ராதா நடித்த
தினசரி 4 காட்சிகள்
கொடுத்து வைத்தவள்

9-வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலுஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
ஆனந்தன், குமாரி சச்சு
ஈ. வி. சரோஜா, அசோகன் நடித்த
தினசரி 4 காட்சிகள்
வீரத் திருமகன்
(புத்தம் புதிய பிரதி)

வெலிங்டன் ஃ முத்துராமன் ஃ சுஜாதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693
[யாழ். நகர்]
சிவாஜி,கே. ஆர்.விஜய
பத்மினி நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
இருமலர்கள்
(புதியபிரதி)


## போயா தினத்தை யொட்டி இன்று சினிமா காட்சிகள் இல்லை

## அன்னை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசீர்வாதம்செய்யப்பட்டார். தட்டம் ஒன்றை நீட்டி ரூபா 25 தட்சணை கேட்டனர். ரூபா இரண்டுபோட்டு தப்பித்துக்கொண்டோம்.

இதன்பிறகு இந்த மசூதியைச் சுற்றிப் பார்க்கும் ஆசையே இல்லாமல்போய்விட்டது. அல்லாவிடம் 'பாரத்தைப்' போட்டுவிட்டு அங்கிருந்து எடனடியாகவே வெளியேறினோம்.

அடுத்தவாரம் பாண்டிச்சேரியில்...

(தொடரும்)

......

## மலைநாட்டு—

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் காட்டிவிட்டு அதை அந்த நொண்டி மனிதரிடம் கொடுத்தார். அந்த நொண்டியும் அந்தப் பணத்தை எல்லோருக்கும் எண்ணிக்காட்டிவிட்டு தனது சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டார். இந்தச் சம்பவம் எம்.ஜி.ஆர். ரசிகர்களுக்கு மேலும் அவர் மேல்உள்ள பற்றுதலைக் கூட்டிவிட்டது. அவர்கள் தங்களையே மறந்து ஆரவாரிக்கத் தொடங்கிவிட்டார்கள், ''எம்.ஜி.ஆர். வாழ்க'' ''மக்கள் திலகம் வாழ்க'' என்ற கோஷம் எங்கும் ஒலித்தது. இந்த ஆரவாரம் அடங்கியதும் மலைநாட்டு 'லட்சுமி' போட்டி ஆரம்பித்து அதில் வெற்றிபெற்ற பெண்ணுக்கு எம். ஜி. ஆர். பரிசில்களை வழங்கி ஒரு சிறு சொற்பொழிவுமாற்றினார்.

### மேயர் அளித்த விருந்து

இந்த வைபவத்திற்குப் பின் நுவரெலியா மேயரால் நடாத்தப்பட்ட மதியஉணவில்கலந்து கொண்டார் எம்.ஜி. ஆர். அவர் இருந்த மேசையில் சரோஜாதேவி மற்றும் எங்களைச் சார்ந்தவர்களும் அமர்ந்திருந்தோம். அதே மேசையில் அவருக்கு எதிர்ப்புறமாக நானும் எனது மனைவியும் வேறு ஒரு எம். ஜி. ஆர். ரசிகையும் இருந்தோம். இந்த ரசிகை எம். ஜி. ஆரைப் பார்த்தபடியே இருந்தார். எதுவும்பேசவில்லை. எம். ஜி. ஆர். தான் பேச்சுக் கொடுத்தார்.

### ரசிகையின் பார்வை

ஏதோ சில வார்த்தைகள் அந்தப் பெண்ணின் வாயிலிருந்து உதிர்ந்தன. ஆனால் எம்.ஜி.ஆர்.மேல் வைத்தகண் வைத்தபடியே இருந்தது. நேரமாக நேரமாக அப்பெண்ணின் கண்கள் சிவக்க ஆரம்பித்தது. கன்னம் சிவக்க ஆரம்பித்தன. சில அசட்டுத்தனமான கேள்விகளை எம். ஜி ஆரிடம் கேட்டாள் இந்தப் பெண். இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த நான் சரோஜாதேவியைப் பார்த்து தலை அசைத்தேன். அவர் தன்னருகே வரும்படி அழைத்தார். அவரருகே சென்று என்ன என விசாரித்தபோது அவர் நிலை புரிந்தது. அவருக்கு அந்தப் பெண்மணி எம். ஜி. ஆரைப் பார்த்துக்கொண்டிருக்கும் பார்வையும் அவள் கேட்ட கேள்விகளும் பிடிக்கவில்லை. அந்தப் பெண்மணியை அந்த இடத்திலிருந்து அகற்றும்படி என்னைக்கேட்டுக்கொண்டார். அவர் சொன்னார் என்பதற்காக அந்தப் பெண்மணியை அகற்றிவிட முடியுமா? எம். ஜி.ஆருக்கும் நிலைமை புரிந்துவிட்டது.

இதற்கிடையில் மதியஉணவு முடிந்து எல்லோரும் எங்கள் அறைக்குள் போகச் சித்தமானோம். அப்பொழுது எம். ஜி. ஆரிடம் அந்தப் பெண்ணைப் பற்றிக் குறிப்பிட்டேன்.

''அவ பார்வையைவிட்டுத் தள்ளுங்கள் அவ கேட்ட கேள்வியைப் பார்த்தீங்களா. இப்படி எத்தனையோ ரசிகைகளைச் சந்தித்துப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. எத்தனையோ ரகங்கள்'' என்றார். அன்று பிற்பகல் சில தேயிலைத் தோட்டங்களைப் பார்வையிட்டுவிட்டு அன்று இரவு நுவரெலியாவில் தங்கிவிட்டு மறுநாள் காலைகொழும்பு திரும்பினோம்.

## தமிழ் நாவல்......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் 'ஈழத்து நாவல் பொது மதிப்பீடு' என்ற கட்டுரையை அமைத்திருந்தார். ஆரம்பகால நாவல்களின் பண்பம்சங்களையும் வளர்ச்சிக்கட்டங்களையும் கட்டுரையின் அரைப்பங்கிற்கு விரித்தபின்பு, சமகால நாவல்கள்பற்றிய தீர்க்கமான சிலகருத்துக்களைத்தெரிவித்தார். சமகால நாவல்கள் அரசியல் பொருளாதாரப் பார்வையுடையன. சாதிப் பிரச்னையைச் சித்திரிப்பன. மலையக மக்களைச் சித்திரிப்பன. பிரதேசப்பாங்கானவை, வரலாற்றுப் பாங்கானவை, பொழுதுபோக்குப் பாங்கானவை என ஆறுவகையாகப் பகுத்து ஒவ்வொன்றன் போக்கையும் விமரிசித்தார். இளங்கீரன். கணேசலிங்கம் ஆகியோர். நாவல்களில் கலையம்சத்தை மீறிய பிரச்சாரநோக்கும், வர்க்கப் போக்கிற்கியைந்த செயற்கையான பாத்திர சித்தரிப்பும்காணப்படுகின்றன என்றும் டானியல் உயர் சாதி எனப்படுவோரின் ஒழுக்கக் கேடுகளை அம்பலப்படுத்தி அவர்களின் மாயவேடங்களை கலைக்கையில் அகஸ்தியர் சாதிவேறுபாடுகளுடன் தொடர்பான பல சம்பவங்களைப் பதிவுசெய்கின்றார் என்று குறிப்பிட்டார்.

சிறுகதை இலக்கியமளவுக்கு ஈழத்துநாவல் வளரவில்லை எனக் கூறிய திரு. தில்லைநாதன் ஆழ்ந்த நேரடி அனுபவமின்றி அவசரப்போக்கிற் போதிய பரிச்சயமற்ற விடயங்களைப் பலர் நாவலுக்குப் பொருளாகக்கொள்வது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் தனிநபர் நடவடிக்கைகளுக்குத் தரப்படுமளவு முக்கியத்துவம் ஈழத்தில் கதை வளர்ச்சிக்கோ தர்க்கரீதியான சம்பவ ஒழுங்குக்கோ தரப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

தில்லைநாதன் அவர்களின் கட்டுரை சபையிற் காரசாரமான வாதப்பிரதிரவாதங்களைத்தோற்றுவித்தது. கட்டுரையில் ஈழத்து நாவல்கள் தமிழ் நாட்டு நாவலுடன் ஒப்பிட்டு முறையில் ஆயப்படவில்லை என்றும், நாவல்துறையில் தமிழ்நாட்டுக்கு நாம் பெரிதும் பின்தங்கி நிற்கின்றோம் என்றும் கருத்துரையை திரு'சண்முகலிங்கம் தொடங்கி, குன்றிய கலைப்பண்பு, இயல்பான பாத்திரச் சித்திரிப்பின்மை எமது நாவல்களில் தென்படு மாற்றை விளக்கினர். 'தரம் எதனைக்கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது?' எனக் கேள்வி எழுப்பி, எதிர்ப்புக் கணை தொடுத்த திருமலை நவம், இளங்கீரன் ஆகியோர் தெளிவான சமூகப் பிரக்ஞையும், காத்திரமான விடயங்களை ஆளும் தன்மையும்மிக்க நமது நாவலாசிரியரைத் தரங்குறைந்தவர் என முடியாது' எனக் கூறினர். பெயர்பெற்றதாகக் கூறப்படும் தமிழக நாவல்களில் என்ன சமூக நோக்கு இருக்கின்றது' என நவம் ஆவேசத்துடன் கேட்டார். 'நமது நாடு என்ற உணர்வு இருக்கலாம், ஆனால் உண்மையை ஏற்கத்தான் வேண்டும்' என நித்தியானந்தன் குறிப்பிட்டார். செ. யோகராசா, செ. சுப்பிரமணியம், யோ. பெனடிக்ற் பாலன் ஆகியோரும் கருத்துத்தெரிவித்தனர்.

'ஈழத்து நாவல்களின் போக்குக்களை மதிப்பிடுமுகையும் வகையிலேயே தமது கட்டுரை அமைந்ததன்றி, முழுமையான ஆய்வல்ல,' விளக்கமளித்தார் திரு. தில்லைநாதன். ஆய்வரங்குக் கட்டுரைகள்பொதுப்பட அமைந்திருந்தபோதும் கலந்துரையாடல் நமது நாவல் வளர்ச்சியை அலசுவதாக அமைந்தமை ஓர் ஆறுதலேயாம்.

## வேவிலங்கை முத்துமாரி உற்சவம்

யாழ்ப்பாணம் ,ஞாயிறு

அல்வை வேவிலங்கை முத்துமாரியம்மன் ஆலய பங்குனி உத்தரவிழாவும் கற்பூரத் திருவிழாவும் நாளை மறுதினம்திங்கட்கிழமை கும்பாபிஷேகதின இளைஞர் விழாவும் ஆயிரத்தெட்டு சங்காபிஷேகமும் நிகழும் இரவு அம்பாள் முத்துச் சப்பரத்தில் வீதி உலா வருவார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். ]அ]

———

## வட்டார உடற்பயிற்சி போட்டி

சாவகச்சேரி, சனி

''கிராமப்புறப் பாடசாலைகளில் நகரப்புறப் பாடசாலைகளில் காணக்கிடைக்காத முன்னேற்றத்தையும் உற்சாகத்தையும் இன்றைய போட்டிகளில் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்'' என்று சாவகச்சேரி வட்டார உடற்பயிற்சி போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் வடமாநில உடற்பயிற்சி பிரதம கல்வி அதிகாரி வி.தங்கராசா கூறினார்.

மட்டுவில் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் சாவகச்சேரி வட்டாரக்கல்வி அதிகாரி திரு.சி.இராஜநாயகம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் முப்பது பாடசாலைகள்வரை பங்குபற்றிக் கொண்டன.

பதின்மூன்று வயதுக்குட்பட்ட ஆண்கள் போட்டியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும் பெண்கள் போட்டியில் வரணி மகாவித்தியாலயமும் தெரிவு செய்யப்பட்டன.

பதினேழு வயதுக் குட்பட்ட ஆண்கள் வரிசையில் மட்டுவில் மகாவித்தியாலயமும் பெண்கள் வரிசையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியும் தெரிவு செய்யப்பட்டன. சாவகச்சேரி வட்டார விளையாட்டுழ குழு செயலாளர் திரு.ஏ.எஸ்.பாலரத்தினம் நன்றிகூறினார்.(உ)

•••

## ஆறுவது ஆண்டு நிறைவு

சாவகச்சேரி சனி

சாவகச்சேரி தென்னகத் தாரகைமன்றம் இம்மாதம் 16ம்-திகதி தனது 6வது ஆண்டுவிழாவை தென்மராட்சி ரீதியில் விளையாட்டு கலை நிகழ்ச்சிகளுடன் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

அன்று காலை ஆண்கள் ஐந்துமைல் மரதன்ஓட்டம், ஆண்கள் 15 மைல் சைக்கிள் ஓட்டம் பெண்கள் ஐந்துமைல் சயிக்கிள் ஓட்டம் முதலான போட்டிகள் நிகழும்.

•••

## கிளியால் உண்டான கிலி!

சுழிபுரம், சனி

வலிகாமம் மேற்குப்பகுதியிலுள்ள தோட்டக்காணிகளிலும், வயல்காணிகளிலும் உள்ள பயறு, வெண்டிக்காய், எள்ளு போன்றவற்றை கிளிகள் பாதிப்படையச் செய்துவிடுகின்றன.

தினமும் பல நூற்றுக்கணக்கான ரூபா பெறுமதியான வெண்டிக்காய்கள் கிளியினால் கொத்தப் பட்டு பெரும் சேதத்துக்குள்ளாக்கப்பட்டு வருகின்றன.

கூட்டம் கூட்டமாக வரும் இக்கிளிகள் கொடுக்கும் தொல்லையால் தோட்டச்செய்கையாளர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். கிளிகளின் தொல்லையை எவ்வாறு நிறுத்தலாம் என்ற யோசனையை கோரியுள்ளதுடன் அதற்குரிய நடவடிக்கையை உடன் எடுக்குமாறு கமத்தொழில் சேவை நிலையத்தை சமகாரர்கள் வேண்டி

(உ)

# நீர் கிரிமினல் லோயரா சிவில் லோயரா?

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டிலிருந்து தமிழிலே சட்டத்தைப்படிப் பதற்கான வாய்ப்பு தமிழருக்குக் கிடைத்துள்ளது. சட்டக் கல்லூரி, இலங்கைப் பல்கலைக்கழகம் ஆகிய கல்விச் சாலைகளில் தமிழிலே சட்டம் போதிக்கப்படுகின்றது. இதனால் பொதுமக்கள் இப்போது சட்டத்தைப் பற்றி ஓரளவுக்குப் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொல்லமுடியும், இந்தச் சட்டஞானத்தின் விளைவாகத் தமிழ்மக்களுக்குக் கணிசமான அரசியல் ஞானமும் ஏற்பட்டிருக்கின்றது

'சட்டமும் சமுதாயமும் 11

என்று கூறமுடியும். சட்ட ஞானம் வந்ததால் அவர்களுக்கு அரசியல் ஞானம் ஏற்பட்டதா? அல்லது அரசியல் ஞானத்தைப் பெற்றதன் விளைவாக அவர்களுடைய சட்ட ஞானம் வளர்ந்ததா? என்ற கேள்விகளுக்கு மறுமொழி கூறுவது சுலபமல்ல. மறுமொழி கூற நான் முனையவும் இல்லை. எது எப்படியிருந்த போதும் கடந்த பத்தாண்டு காலத்தின் போது, தமிழ் மக்களின் சட்ட அறிவும், அரசியல் அறிவும் பிரமிக்கத்தக்க அளவுக்குப் பெருகியுள்ளது என்பதுமட்டும் உண்மை. தேர்தல் ஆட்சேபனை வழக்குகள், அவசரகாலச்சட்டத்தின் கெடுபிடிகள் என்பன தமிழ்மக்களின் சட்டஞானத்தை வளர்ப்பதற்குப் பெருமளவில் உதவியுள்ளன. இதனால் ஊர்ப் பக்கத்தில், ஒவ்வொரு குடிமகனும் ஒரு ஊர் அப்புக்காத்துவாக விளங்குகின்றான். இதனால் ஊர் அப்புக்காத்துக்கள் கூட்டம் இப்போது இல்லாது போய்விட்டது. எல்லோரும் சட்டஞானம் பெற்றுவிட்டார்கள். இதனால் அப்புக்காத்துப் பிறக்கிராசிமாரின் 'வண்டவாளங்கள், இப்போது அவ்வளவாக 'வாய்ப்பதில்லை' பெருமைப்படக்கூடிய விடயந்தான்!

கணிசமான அளவுக்குச் சட்டஞானம் பெற்றிருந்தாலும் கிறிமினல், சிவில் என்ற விடயங்கள் அவர்களை மலைக்கவே செய்கிறது. புதிய சட்ட

செ. சிறீக்கந்தராசா

வறிஞர் (Lawyer) ஒருவரை முதன் முதலாகக் காணும் போது 'தம்பி, நீங்கள் கிறிமினல் லோயரா? சிவில் லோயரா?' என்றுகேட்க அவர்கள் தவறுவதில்லை. ஜி. சி. ஈ. (G.C.E.) படிக்கும் பையனைப் பார்த்து, 'நீர், சயன்சா? ஆட்சா? என்று கேட்கின்ற பேர்வழிகளைப் போலவே, யாழ்ப்பாணப்பகுதியில் இன்றும் கிரிமினலா? சிவிலா? என்று கேட்கிறார்கள். சட்டக் கல்லூரியில் பயின்று வெளியேறும் போதே, ஒருவர், கிரிமினல் லோயராக அல்லது சிவில் லோயராக வெளியேறுவதாக அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றது சட்டக்கல்லூரியில் சிவில் சட்டத்துக்கான பாடங்கள், கிரிமினல் சட்டத்துக்கான பாடங்கள் என்ற எல்லாப் பாடங்களையும் எல்லோரும் படிக்கிறார்கள் என்பது அவர்களுக்குப் புரிவதில்லை. பல்கலைக்கழக படிப்பு முடிந்து, பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும் போது, பி. ஏ. என்றும் பி. எஸ் சி. என்றும் பட்டதாரிகள் வெளிவருவதுபோலச் சட்டக்கல்லூரிக் கல்வி முடிந்து தேர்வில் தேறி, சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டவுடனும், கிரிமினல் லோயராகவும், சிவில் லோயராகவும் [illegible]டம் பெற்றுவருவதாக மக்கள் நம்புகிறார்கள். அத்தோடு கிரிமினல் லோயர், சிவில் லோயரை விட அறிவாலும் ஆற்றலாலும் மிக்கவர் என்றும் பொதுமக்கள் நம்புகின்றார்கள். நம்மவர்கள் நீதிமன்றத்துக்குப்போனால், பெரும்பாலும் குற்ற வழக்குகள் சம்பந்தமாகவே. இந்தக் குற்றவழக்குகளில் அவர்கள் சந்திக்கின்ற கோடையிடிப் பேச்சுக்களும் குறுக்குக் கேள்விகளும் சிவில் வழக்குகளில் ஏற்படுவதில்லை. இதனாலேதான் கிரிமினல் லோயர் என்பவர் பொதுமக்களின மதிப்பைப் பெற்றவராக இன்றும் மிளிர்கின்றார். கிரிமினல் (குற்றவியல்), சிவில் (குடியியல்) என்ற விடயங்கள் பற்றிச் சரியான அறிவு இன்மையாலேயே மக்கள் இப்படி அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். எனவே இவற்றைப்பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள முயல்வோம் அடுத்த கட்டுரையில். (அ)

## சத்தியாக்கிரகத்துக்கு பொதுமக்கள், கடைக்காரர் ஆதரவு

யாழ்ப்பாணம், ஞாயிறு கைதடி அரசினர் ஆயுள் வேத நிலையத்தின்முன் சத்தியாக்கிரக போராட்டம்நடத்தி வரும் யாழ். லங்கா ஆயுர்வேதக் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கடந்த வெள்ளிக்கிழமை கைதடியில் உள்ள தடைகள் பூட்டப்பட்டிருந்தன.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினமும் மற்றும்பலரும் நேற்று மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

நேற்று முன்தினம் இங்கு விஜயம்செய்து நிலைமையைப் பார்வையிட்டு திரு. வ. பொன்னம்பலம் இதுவிடயமாக உயர் அதிகாரிகளுடனும் கொழும்பு பிரமுகர்களுடனும் பேச்சு நடத்த கொழும்பு சென்றுள்ளார்.

இம்மாணவர்களின் சார்பில் அமைச்சரைச் சந்திப்பதற்கு தூதுக்குழு ஒன்று சென்றுள்ளது.

இரவுநேரங்களிள இப்பகுதிப் பொதுமக்களும் மாணவர்களுக்குத் துணையாக இங்கு இருந்து வருகின்றனர். தினமும் நூற்றுக்கதிகமான மாணவ மாணவிகள் இப்போராட்டத்தில் கலந்து கொள்கின்றபோதும் மேற்படி கட்டிடத்திற்குள் எவரும் உட் செல்லாதவாறு கட்டிடங்கள் யாவும் வெளியில் பூட்டப்பட்டுள்ளன. (வண்றி)

## பளையில் ஒரு பெண் கோரக்கொலை

யாழ்ப்பாணம், ஞாயிறு பளை பொலிஸ் பகுதியில் ஒரு பெண் வெட்டுக்காயத்திற்குப் பலியாகியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக இதுவரை சந்தேக நபர்கள் எவரும் கைதாகவில்லை.

பளைப் பொலிசார் மரண விசாரணைக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளனர். (க)

## ஏ. பி. நாகராஜன் காலமானர்

சென்னை, மார்ச். 2 பிரபல படத்தயாரிப்பாளரும் டைரக்டருமான ஏ. பி. நாகராஜன் நேற்றிரவு மாரடைப்பால் காலமானர்.

1922ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ம் திகதி சேலத்தில் பிறந்த திரு. நாகராஜனுக்கு இறக்கும்போது 55 வயது. மிக எளிமையான நிலையில் இருந்து உழைப்பால் உயர்ந்தவர் திரு. நாகராஜன்.

சாதாரண நாடக நடிகராக வாழ்க்கையை ஆரம்பித்த அவர், கதை வசனகர்த்தாவாகவும், கதாசிரியராகவும், டைரக்டராகவும் படத்தயாரிப்பாளராகவும வளர்ந்தார்.

அவர் தயாரித்த தில்லானு மோகனும்பாள், சம்பூரண ராமாயணம், மாங்கல்யம், திருவிளையாடல், ராஜராஜ சோழன் போன்றபடங்கள் பிரபல்யமானவை.

## செல்வா சுகம்பெற நல்லை ஆதீனத்தில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஞாயி மூதறிஞர் செல்வாவின் உடல்நலம் தேற, அவரின் பிறந்த தினமான நேற்று முன்தினம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் விசேட பூசையும் பிரார்த்தனையும் இடம்பெற்றன.

அதிகாலை விசேஷ அபிஷேகமும், ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் தலைமையில் ஆதீனப் பன்னிரு திருமுறைப் பண்ணிசை மன்றத்தின் திருமுறைப் பஜனையும், நண்பகல் விசேஷ பூசையும் நடைபெற்றது. இப்பூசையில் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் கலந்துகொண்டு ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளிடம் அருட்பிரசாதம் பெற்றார். ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் தாமே பூசையை நடத்தினர். நல்லூரர் கூட்டணிப் பிரமுகர் துரைராஜசிங்கமும் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள் பூசை முடிவில் அருளுரை வழங்கினர். ''தீராதநோய் தீர்த்தருள வல்ல இறைவனைப் பிரார்த்தித்து, தமிழே தன் மூச்சாகக் கொண்டு தமிழ்மக்களின் கலங்கரை விளக்காக விளங்கும் மூதறிஞருக்கு நீண்ட ஆயுள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்'' என்று அவர் தமது அருளுரையில் கூறினர்.

திரு. துரைரத்தினம் பேசும் போது, ஆண்டவனிடம் மத பேதமின்றி நாம் இன்று வழிபாடாற்றுகிறோம். இந்தப் பிரார்த்தனை அலைகள் இறைவனின் கருணையை நிச்சயம் தூண்டுமென்றார்.

திரு. துரைராஜசிங்கமும் உரையாற்றினர்.

மாலையில் பஜனைகளும், கூட்டுப்பிரார்த்தனையும், ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளின் 'தீராத நோய் தீர்த்தருள வல்லான்' என்ற விரிவுரையும் நடைபெற்றது.

அகில இலங்கைத் திருப்புகழ் மாமன்ற உதவி ஆலோசகர் செல்வி கோ. மீனம்பிகை நன்றி தெரிவித்துப் பேசினர். (இ)

## சத்தியாக்கிரகத்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

வருவதாகவும், சரியான வழியில் சென்றால்தான் பயன் கிடைக்குமென்றும் அவர் கூறினர்.

கைதடி ஆயுர்வேதக் கல்லூரியை கல்வி அமைச்சு பொறுப்பேற்றுள்ளது. ஆகவே லங்கா ஆயுள்வேத கல்லூரி மாணவர்களையும்அக்கல்லூரியில் சேர்க்க வேண்டுமானல் அவர்கள் உடனடியாக கல்வி அமைச்சுக்கு தங்களைச் சேர்க்குமாறு விண்ணப்பிக்கவேண்டும். அக் கோரிக்கையை நானும் சிபார்சு செய்து கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கிறேன். ஆதலால் மாணவர்கள் தாமதியாமல் சத்தியாக்கிரகத்தைக் கைவிட்டு கல்வி அமைச்சுக்கு விண்ணப்பிக்கவேண்டும். (க)

நெடுந்தீவு, நயினதீவுக்கு

## தனிச் சங்கங்கள் வேண்டுமாம்

வேலணை, சனி புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தின்கிழ் நயினதீவு, நெடுந்தீவு ஆகிய கிராமங்களையும் உள்ளடக்கியதற்கு ஆட்சேபம் தெரிவித்தும் மேற்படி இரண்டு தீவுகளுக்கும் தனித்தனி ப. நோ. கூ. சங்கங்கள் அமைப்பதற்கு அமைச்சரின் அங்கிகாரத்தைப் பெற நடவடிக்கை எடுக்குமுகமாகவும், நயினதீவு, நெடுந்தீவு கிராமங்களைச் சேர்ந்த பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட கூட்டமொன்று நடைபெற்றது.

நயினதீவு வடக்கு சிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. சி. சி. சின்னத்துரை இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

## அமைச்சருக்கு இன்று வரவேற்பு

மாவிட்டபுரம், ஞாயிறு வடபகுதிக்கு உத்தியோக பூர்வமான விஜயமொன்றை மேற்கொண்டு இன்று காலை பலாலி விமானநிலையம் வந்தடையும் கலாச்சார அமைச்சருக்கு அமோக வரவேற்பளிக்கப்படவிருக்கிறது.

இன்று காலை 7 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடையும் கலாச்சார அமைச்சர் திரு. தென்னக்கோனையும் அவரது இரு செயலாளர்களையும் சிறந்தமுறையில் வரவேற்கவேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேளவாத்திய சகிதம் அமைச்சருக்கும், அவரது செயலாளர்களுக்கும் வரவேற்பளிக்கவேண்டிய ஒழுங்குகளை யாழ், அரசாங்க செயலக அதிகாரிகளும் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவாவும் மேற்கொண்டுள்ளனர். (க)

## ஸ்ரீராம பட்டாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் ஸ்ரீ ராம பட்டாபிஷேக விழா இன்று மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது.

கோப்பாய் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கயர்க்கரசி திருச்சிற்றம்பலம் 'கருணைக்கு ஒரு தெய்வம்' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

ஸ்ரீராமர் இலட்சுமண சீதா பிராட்டி சமேதராக வீதி உலா வருவார். (இ)

## அமிர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தால் சந்திக்க முடியவில்லை என்று தெரிவித்தாராம்.

விரைவில் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைத் தாம் செய்ய இருப்பதாகவும் திரு. வாசுதேவா உறுதி கூறினாராம்.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna Telegrams Eelanadu, Telephone 389, Registered as a Newspaper in Sri Lanka.